ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:


# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்ய:.

ஸம்புடம் 18 ] ப்ரபவ ஹல, மார்கழி மீ [ஸஞ்சிகை 3


ஸ்ரீ ஹ்ருஷீகேஶம் தத்ராவணம் ஸவிகாரமளாரவராம் பரம் உபாஸதே ।

பவாபஸ்கக்ஷோவ்யதாநநாஜெ விஜயஸ்வெ ஸதிஸ்ஹ ஶெஷநவத்ரூ॥

['ஸ்ரீ பாகவதம். 1-9 23]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

## பகவானுடைய ஜகத் காரணத்வம்.


(ஸ்ரீ உப. தேவனூர் விளாகம் லக்ஷ்மிநரஸிம்ஹாசார்யர்.)



(முன் தொடர்ச்சி. பக்கம்—42.)


ஈச்வரன் ஸகலேதர விலக்ஷண னானபடியால் லோகத்ருஷ்டி ப்ரக்ரியயா அவனுக்கு அதிஷ்டாத்ருத்வம் மாத்ரம் சொல்லக்கூடாது. அசிந்த்ய விசித்ர சக்தியானபடியால் தானே ஸங்கல்பித்து ஜகத்ரூபேண ஆகலாம். (மநுவும், 'ஸோபிதயாய ஶரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர் விவிதா: ப்ரஜா:' என்று சொல்லி யிருக்கிறார்.) இதையும் தத்வ முக்தா கலாபத்தில் முன் எடுக்கப்பட்ட ச்லோகத்திற்கு முதல் ச்லோகத்தில் ஸங்க்ரஹித்திருக்கிறார்:—

"ஸ்வைச்யைவா ஸிம்தப்ஶக்தே ஸவிஜநயிது ஸ்வாதாநபாதாநஹாவ:

ஸூக்ஷ்மாவஸ்தாத்ததேஹ: பரிணமதி யதா ஸந்தகயா ஸ்வர்ணவ்யக்த்யா।

निष्कर्षे शरीरिण्यखिलगुणगणालंकृतानन्दरूपे
संपद्यन्ते समस्ता श्रुतिशतमतयो निर्विकारादिवादाः ॥"

[अखिलजनयितुः—எல்லாவற்றையும் உண்டுபண்ணுகிற, अचिन्त्यशक्तेः—நினைப்பரிய சக்தியுடையவனான, अस्यैव—இவனுக்கே, उपादानभावः—உபாதானத்வமும், स्यात्—கூடும். ஏனென்றால், यतः—யாதொரு காரணத்தால், सूक्ष्माव्यक्तादिदेहः—ஸூக்ஷ்மமான அவ்யக்தாதிகளைத் தேகமாக உடையவன், स्थूलरूपत्वा—ஸ்தூலமான கார்யமாக, अनेकधा—பகுப்ர காரமாக, परिणमति—பரிணமிக்கிறானே (ஆகையால் பாதகமில்லை யென்று கருத்து.) अखिलगुणगणालंकृतानन्दरूपे—ஸமஸ்த குணகணங்களால் அலங்க்ருதனான ஆநந்த ஸ்வரூபனான, अस्मिन्—இந்த, निष्कर्षे शरीरिणि—விசேஷண மில்லாத அந்தர்யாமியில், समस्ताः निर्विकारादिवादाः—எல்லா நிர்விகார வசநங்களும், सुपथितमतयः—நல்ல வழியுள்ளவையாக ஆகின்றன] அசிந்த்ய சக்தியானபடியால் உபாதாநத்வத்திற்கும் நிமித்தத்வத்திற்கும் குறைவில்லை யென்ற அபிப்ராயத்தால் இந்த வாதத்தில் ப்ரதிபாத்ய குணம் நிரவதிக மஹிமத்வம் என்று அதிகரணஸாராவளியில் ஸாதித்தார். இன்னும் ச்ருதியில் 'यद्भूतयोनिं परिपश्यन्ति धीराः' என்று உபாதாநத்வம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இவ்விடத்தில் யோநி சப்தம் காரண மாத்ரபரமாக இருக்கக்கூடாதோ வென்னில்: காரண மாத்ர பரமன்று. ஏனென்றால் 'कस्मिन्नु भगवो विज्ञाते सर्वमिदं विज्ञातं भवति' என்ற ப்ரச்நத்திற்கு ப்ரதிவசந ப்ரகரணத்தில் பூதயோநி என்று ப்ரும்ஹத்தைச் சொல்லியிருக்கிறது. இவ்விடத்தில் ப்ரும்ஹத்திற்குப் பூதோபாதாநத்வம் சொன்னால்தான் 'ब्रह्मविज्ञानात् सर्वविज्ञानम्' என்றது சரியாகும். कथं ब्रह्मणः उपादानत्वं ? உபாதாநமெல்லாம் ஸ்வபிந்ந நிமித்த காரண ஸாபேக்ஷமன்றோ? ஏகமான ப்ரும்ஹம் பரஸ்பர விலக்ஷணமந்த ப்ரபஞ்சத்திற்கு எப்படி உபாதாநமாகும்? உபாதேயமாகப் பரிணமிக்கும்போது ஸ்வாகார திரோதாநமும் உண்டோ? என்ற சங்கைகள்வர அதை லௌகிக த்ருஷ்டாந்தத்தினால் ஸமர்த்திக்கிறது மேல் வாக்யம் 'यथोर्णनाभिः सृजते गृह्णते च यथा पृथिव्यामोषधयः संभवन्ति । यथा सतः पुरुषात्केशलोमानि तथाक्षरात्संभवतीह विश्वम्' என்று. ऊर्णनाभि அதாவது எட்டுகால் பூச்சி (ஒட்டடை) தந்துவை உண்டுபண்ணும்போது எப்படி இதர நிரபேக்ஷமோ, அப்படியே அதற்கு அந்தச் சக்தியைக் கொடுத்த ஈச்வரனுக்கும் ஸ்வேதர நிரபேக்ஷமாக ஜகதுபாதாநத்வம் வரலாம். இவ்விடத்தில் ஊர்ணநாபி த்ருஷ்டாந்தத்தால் விசிஷ்டம் உபாதாநம் என்றதும் விசேஷ்யமான ப்ரும்ஹத்திற்கு நிர்விகாரத்வமும் ஏற்பட்டன. ஊர்ணநாபியின் கேவல தேஹத்திலும் கேவலாத்மாவிலும் அவஸ்தா ப்ராப்தி யில்லை;

கிந்து, தேஹ விசிஷ்டாத்மாவிலே; அப்படியே கேவல ப்ரக்ருதியிலும் அவஸ்தாச்ரயத்வம் வராது; கேவல ப்ரும்ஹத்திலும் வராது; கிந்து, விசிஷ்ட ப்ரும்ஹத்தில் தான். விசிஷ்டப்ரும்ஹத்தில் வந்தாலும் விசேஷபத்தில் தோஷங்கள் சேரா. இதை ‘ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாதிரநுகுண அவிக்ருதிரஸஸ ஸர்வாத்ம ஸர்வஸ்ய ஸர்வமேவ தேஹஸம்பந்தாத் நாஹி ப்ரக்ருதி விக்ருதி பக்ஷே தோஷஸ்பர்ச தத்ஸ்வாத்’ என்று அதிகரண ஸாராவளியில் ஸாதித்திருக்கிறார். ப்ருதிவீ புருஷ த்ருஷ்டாந்தத்தால் ஏகத்திற்கே அநேக கார்யோபாதாநத்வமும் பூர்வாவஸ்தா திரோதாநாபாவமும் பொருந்தும் என்றதாயிற்று. ததா ச ப்ரஹ்மண: உபாதாநத்வமும் நிமித்தத்வமும் ஸித்தம். இந்த யுக்திகளை, ஸூத்ரத்தை ஒட்டி, ‘கார்யைக்யே ஹி ப்ரதிஜ்ஞா ததநுகுண உதாஹாரி த்ருஷ்டாந்த வர்க: ஸ்ருஷ்டே: ஸ்ரஷ்டாபித்யாபித்யாம் ச்ருதிரிஹ வததாம் பக்ஷதாதிஷு வக்தி। ஸூத்ராதௌ ஏஷ ஏவ ஸ்வயம் கர்த்ருத்வ ஹேதுயோநித்வம் ததுக்தம் ததாவி ஏவ: ப்ரக்ருதிரபி ஹேதுத்வத: ததாந்தராத்॥’’ என்ற ஒரு ச்லோகத்தால் ஸங்க்ரஹித்தார் நம் தேசிகன். ‘கார்யைக்யே ஹி ப்ரதிஜ்ஞா வடதே’ என்ற இதனால் உபாதாநத்வமும் அர்த்தாந் நிமித்தத்வமும் சொல்லப்பட்டன. ததநுகுணமாக வன்றோ த்ருஷ்டாந்தத்ரயமும் உதாஹரிக்கப் பட்டிருக்கிறது? ஸ்ரஷ்டாவுக்கு ‘ஸ்யாம்’ என்ற ஸங்கல்பத்தையும் வநத்வத்தையும் வ்ருக்ஷத்வம் முதலியவற்றையும் ச்ருதி சொல்லுகிறது. ‘ஏஷ ஏவாதாநம் தத் கர்த்தா’ என்றும் ‘ஹேதுயோநி’ என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் எல்லா தத்வங்களுக்கும் அந்தராத்மாவான (அதாவது எல்லாவற்றிற்கும் சரீரியான) ஈச்வரன் அநவதிக மஹிமா வானபடியால் நிமித்தமாயும் உபாதாநமாயும் ஆகலாம்.

ப்ரும்ஹம் ஒன்று தான் ஸத்யம் மற்றது மித்யை என்றும், ப்ரும்ஹம் அதிஷ்டாநம் என்றும் சொல்லும் பக்ஷத்தில் ப்ரும்ஹத்தை உபாதாநமாகச் சொல்வதும் உபாதாந பூத ப்ரும்ஹ ஜ்ஞாநத்தால் உபாதேய ஸர்வஜ்ஞாநமும் உண்டாகலாம் என்று சொல்வதும் பொருந்தாது. ரஜ்ஜுவைப் பார்த்து ஸர்ப்பம் என்று ஒருவன் ப்ரமித்தால் மித்யையாகத் தோன்றும் ஸர்ப்பத்திற்கு ரஜ்ஜு உபாதாநமாக மாட்டாது போல், மித்யையான ஜகத்திற்கு ஸத்யமான ப்ரும்ஹம் உபாதாநமாக மாட்டாது. ஏவம் யதா, ரஜ்ஜு ஜ்ஞாநத்தினால் ஸர்ப்ப பூதளந அம்பு தாராதிகள் விஜ்ஞாதமாகாவோ, அப்படியே ப்ரும்ஹ ஜ்ஞாநத்தினால் மித்யா வஸ்துக்களுக்கு ஜ்ஞாதத்வம் வாராது. ஆனால் லோகத்தில் ஒருவன் ரஜ்ஜுவைப் பார்த்து ஸர்ப்பம் என்றும், மற்றொருவன் பூதளந மென்றும், பலபேர் பலவிதமாக ப்ரமித்துக்கொண்டிருந்தால், ரஜ்ஜு ஜ்ஞாநம் வந்தால் எல்லாம் தெரியும் என்றால், ரஜ்ஜு தவிர ஸர்ப்பாதிகள்

இல்லாதபடியால் எல்லாம் தெரியும் என்று எப்படி அர்த்தம் கொள்வது உசிதமோ, அப்படியே ஜகத் மித்யை என்று 'வாசாரம்பணம்' என்ற ச்ருதியில் ஏற்பட்டபடியால் ஏக விஜ்ஞாநேந ஸர்வ விஜ்ஞாநத்தை அதே மாதிரி நிர்வஹிக்கலாம் என்றால் அதுவும் அநுபபந்நம். 'வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்' என்ற ச்ருதியில் ஜகத்திற்கு மித்யாத்வம் ஏற்படாது. அந்த ச்ருதிக்கு, விகார:—அவஸ்தா என்ன, நாமதேயம்—பெயரென்ன இவைகள், ஆரம்பணம்—தொடப்படுகின்றன; தேந ஸ்ப்ருஶ்யந்த இதி விசேஷ:. எதற்காக வென்றால், வாசா—வாக் சப்தத்தால் தத்பூர்வக வ்யவஹாரம் சொல்லப்படுகிறது, வ்யவஹார ரூப ஹேதுவால்; அதாவது வ்யவஹாரார்த்தம் என்று சொல்லப்பட்டது. வ்யவஹாரம் முதலியவைகளுக்காக ம்ருத் த்ரவ்யமானது கடாதி ரூப விகாரத்தையும் கடாதி நாமதேயத்தையும் அடைகிறது என்று கட்ட தாத்பர்யம். எதனால் அப்படிச் சொல்வதென்றால் மேல் 'ம்ருத்திகேத்யேவ ஸத்யம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடாதிகளெல்லாம் ம்ருத்திகையென்றே ப்ரமாண ப்ரதிபந்நமானபடியால்; ததா ச, யத: ம்ருத்திகேத்யேவ ஸத்யம் அத: விகார: நாமதேயம் ஆரம்பணம் வாசா இத்யந்வய:. 'காலையில் எந்த ம்ருத்தானது என்னால் பார்க்கப்பட்டதோ அதே ம்ருத் இப்பொழுது கடமாக ஆயிற்று' என்கிற ப்ரத்யபிஜ்ஞையால் கடாதிகள் ம்ருத்தைக்காட்டிலும் அபிந்நம் என்று ஏற்படுவதால் கட சராவாதி ரூபேண விகாரமும் தாத்ருச பெயரும் வ்யவஹாரம் முதலியவற்றுக்காகக் கடத்திற்கு வந்திருக்கிறது. வஸ்துத: ம்ருத்தும் கடமும் ஒரே த்ரவ்யமே என்றுதான் அர்த்தம் கொள்ளவேணும். அந்யதா ம்ருத்திகேவ ஸத்யம் என்று சொல்லவேணுமே தவிர இதிகரணம் வ்யர்த்தமாகும். இதை ஒரு அநுஷ்டுப்பில் பூர்வர்கள் ஸங்க்ரஹித்தார்கள்,

"வாசாரம்பண இத்யுக்தே இத்யேதத் ப்ராக்தநம் |
வாக்ருந்தி நாமதேய இதீதஸ்ய நிரூபிதா ||"

ஆகையால் விவர்த்தவாதத்தில் உபாதாநத்வமும் ஏக விஜ்ஞாநேந ஸர்வ விஜ்ஞாந ப்ரதிஜ்ஞைகளும் பொருந்தமாட்டா.

ப்ரஹ்மத்திற்கே உபாதாநத்வத்தையும் நிமித்தத்வத்தையும் தெளியாத பறை நிலங்களைத் தெளிவிக்க வந்த குருகேசாதிகள் செய்ய தமிழ்மாலைகளில் அவ்வவ்விடங்களில் அருளிச்செய்திருக்கிறார். அதில் 'யத்தத்த்வம் ஶ்ருதீநாம் முநிகண விஹிதை: ஸேதிஹாஸை: புராணை: அத்ராஸௌ ஸர்வஶீர்ஷ ஸம்ஶயநசந்தை ஸம்ஹிதா ஸாவதாநளீ' [முநிகண விஹிதை:—முநிகணங்களால் செய்யப்பட்ட, ஸேதிஹாஸை:—இதிஹாஸங்களோடு கூடின, புராணை:—புராணங்களால், ஶ்ருதீநாம்—ச்ருதி

களுக்கு, யதகூ்ரதஂ—செய்யக்கூடியது யாதொன்றோ, தகூ—அதில், ஸகூவஸீநூ:—ஸத்வத்திற்கு வாஸஸ்தாநமான, ஶஂஶயநஶெநெ:—ஆழ்வாருடைய, ஸஂஹிதா—வேதமானது, ஸாவஉஹௗஃ—சக்ரவர்த்தி] என்று ஆழ்வார் ஸூக்தி வேதோப ப்ரும்ஹணங்களுக்குள் ப்ரதாநம் என்றும், "ஶாஷெூ தெஹாதிரிக்தாதநி த஡யிவதள ததஸா஢ாஷ்ூவாயெ தஸாஷிஜெயஸாவள் • தஜுவஅஶணதொடநஞதாவாஹிவாதெ। தஸூகாநாம் வூஹாவெ தஊவஸஉநதஸாஞகாஶுஷ்ூ ஶாஞள, ஸாஶஂ வெஉூஂ வூவெஶெ ஸகுஶஉகயயதூாந-கஂவஸூாஶி: ॥" [தெஹாதிரிக்தாதநி—தேகத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்ம விஷயத்திலும், த஡யிவதள—அதற்குச் சேஷியான ஈச்வர விஷயத்திலும், ததஸா஢ாஷ்ூவாயெ—அவனுடைய ப்ரஸாதத்திற்கு வேண்டிய உபாயத்திலும், தஸாஷிஜெயஸாவள—அந்த உபாயத்தால் மோக்ஷம் அடைவதிலும், தஜுவஅஶணத:—பகவதபசாரத்திலும், ஊநஞதாவாஹிவாதெ—அநந்த தாபத்தைப் போக்குவதிலும், தஸூகாநாம் வூஹாவெ—பகவத் பக்தர்களுடைய ப்ரபாவத்திலும், தஊவஸஉநத: வாஞகாஶுஷ்ூ ஶாஞள—பாகவத உபாஸநத்தால் சித்தகாலுஷ்பத்திலுடைய சமநத்திலும், ஶாஷெூ—சாஸ்த்ரத்தில், வெஉூஂ—அறியக்கூடிய, ஸகுஶஂ ஸாஶஂ—ஸகல ஸாரத்தையும், ஸாந-கஂவ:—தயையோடு கூடின, ஶாஶி:—ஆழ்வார், வூவெஶெ—தமது வேதமான திருவாய்மொழியில், ஊகயயகூ—அருளிச்செய்தார்.] என்று நிகில சாஸ்த்ர ஸாரங்களையும் ஸங்க்ரஹித்தார் ஆழ்வார் என்றும், 'ஶூஉள ஶாரீரகாய உ ஊஉஹிஹ விஶஉஂ விஂஶதி வஉக்திஸாஶூா' [உஹ—இந்தத் திருவாய்மொழியில், ஶூஉள—முதலில், ஸாஶூா—அக்ரத்தோடு கூடின, அதாவது சொச்சமான, விஂஶதி:—இருபது பாசுரம், ஶாரீரகாய உ ஊஉஂ—சாரீரகம் என்று பேர் பெற்ற வேதாந்தார்த்த க்ரமத்தை, வக்தி—சொல்லுகிறது] என்றும், 'விகாஹூாம் ஆஷ்டாஂவிூ உ உயி மஉநீதிஷூவஷிதா யஉஞூா ஃஶஂஸா ஶூதிஶிவஶதகூஂ வூவஶண-த। தஊஉள மாயாஹி உ உ-நிஶயிக விஂஶாஹிஹிஹந: கூதீஸாஶ ஶூாஹஂ வூதஶஹிஹ ஸஂஶூஹூ கூவயா ॥' [விகாஹூாம்—பூர்வத்விக உத்தர த்விகங்களால், ஆஷ்டாஂவிூ:—பதினாறு பாதத்தோடு கூடினதாயுமிருக்கிற, ஊஞூா ஃஶஂஸா—ப்ருஹ்ம மீமாம்ஸா சாஸ்த்ரமானது, யகூ—யாதொரு, ஶூதிஶிவஶ தகூஂ—வேதாந்த தத்வத்தை, வூவஶண-த—விவரித்ததோ, தகூ—அந்த வேதாந்த தத்வத்தை, கூதீ—ஸமர்த்தரான, உ-நி:—ஆழ்வார், கூவயா—தயையினால், உஹ—இந்தத் திருவாய் மொழியில், ஶூஉள—முதலில், ஊயிகவிஂஶாஹி:—இருபதுக்கு

அதிகமான, மாயாபிஃ—பாசுரங்களால், ஸம்ம்ருஹ்ய—ஸங்க்ரஹித்து, நஃ—நமக்கு, வ்யதாநக்—கொடுத்தார்.] என்று சாரீரக சாஸ்த்ர ஸங்க்ரஹம் இருபத்தோரு பாசுரத்தால் செய்யப்பட்டதென்றும் நம் தேசிகனால் கொண்டாடப்பட்டுள்ள திருவாய்மொழியில் பரத்வ ப்ரதிபாதகமான முதல் தசகத்தில்—

“ திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
படர்பொருள் முழுவது மாயவை தொறும்
உடன்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியு ளிவையுண்ட சுரனே.”

[திடவிசும்பு—வாய்வாதிகளைக் காட்டிலும் ஸ்ரகல ஸ்தாயியான அல்லது த்ருடப்ரமாண ஸித்தமான ஆகாசம், எரி—அக்நி, வளி—வாயு, நீர்—ஜலம், நிலம்—பூமி, இவைமிசை—இந்தப் பதார்த்தங்களின் மேல், படர் பொருள் முழுவதும்—படருகிற எல்லா வஸ்துவும் (ஜகத் பாஞ்ச பௌதிகமானபடியால் எல்லா ஜகத்தும் என்றபடி) ஆய்—ஏதத் ரூபேண ஆகி, அவை அவை தொறும்—அந்தந்தப் பதார்த்தங்கள் தோறும், உடல் மிசை உயிரென—சரீரத்தில் ஜீவன்போல, கரந்து—மறைந்து, எங்கும் பரந்து—அந்தர் பஹிஶ்ச வ்யாபித்து, இவை உண்ட சுரன்—இவற்றைப் ப்ரளயகாலத்தில் ஸம்ஹரித்த தேவன், சுடர் மிகு சுருதியுள்—ஸ்வஸாக்ஷெபதயா தேஜிஷ்டமான வேதத்தின் உள்ளே ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறான் என்றபடி] என்ற பாசுரத்தால் உபாதாநத்வத்தையும் அதற்கு உபபாதகமான சரீராத்ம பாவத்தையும், அந்த விஷயத்தில் ப்ரமாணம் ச்ருதி யென்பதையும் அருளிச்செய்தார். இவ்விடத்தில் உபாதாநத்வம் விவக்ஷிதமென்பது, “முழுவதும் ‘ஆய்’ என்பானேனென்னில், ‘பஹுஸ்யாம்’ என்கிற தன் விகாஸமாகையாலே வைதிக நிர்த்தேச மிருக்கிறபடி” என்ற ஈட்டின் பங்க்தியால் நன்றாய் ஏற்படுகிறது. இந்த விடத்தில் ‘உடன்மிசை யுயிரென’ என்ற த்ருஷ்டாந்தத்தால் பாலுக்வ யௌவநாத்ய வஸ்தாஶ்ரயத்வம் ஜீவனுக்கு எப்படி ஸத்வாரகமோ அப்படியே தானும் ஈச்வரனுக்கும், அதனால் நிர்விகாரத்வாதி ச்ருதிவிரோத மில்லை யென்று கீழ் உபபாதித்த அர்த்தமெல்லாம் கர்ப்பிதமென்று ஏற்படுகிறது. மேலும் ‘நினைந்த வெல்லாப் பொருள்கட்கும் வித்தாய் முதலில் சிதையாமே’ ‘தானோருருவே தனிவித்தாய்’ ‘இவையுமவையு முவையும் இவரு மவரு முவரும் யவையயவரும் தன்னுள்ளேயாகியு மாக்கியுங் காக்கும் அவையுள் தனி முதலெம்மான்’ என்றும் சொல்லப்பட்ட விடங்களில் ஸ்பஷ்டமாக உபாதாநத்வமும் நிமித்தத்வமும் ஏற்படுகின்றன. இப்படியே மேல் பத்துகளிலும் அவ்வவ்விடங்களில் ‘யத்தத்ஸ்தம்’

என்று சொன்னபடி, உபப்ருஹ்மண மானபடியால் ச்ருதியில் போல் கலு ஷிதமாகச் சொல்லாதபடி ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கிறூர். அதில் அஹம்பாவ விஷயனுக எம்பெருமானை ஆழ்வார் அநுபவிப்பதாக நம் தேசிகன் திருவுள்ளம் பற்றி யிருக்கும் 'கடல் ஞாலம்' என்ற தசகத்தில் முதல் பாசுரத்தில் 'கடல் ஞாலம் செய்தேனும் யானேயென்னும் கடல் ஞால மாவேனும் யானே யென்னும்' என்ற இரண்டடியால் ப்ரும்ஹத்திற்கே உபாதானத்வம் நிமித்தத்வம் என்றதைக் காட்டி யருளினுர். அநுபவித்தபடியே பேசும் பேச்சான படியாலே கொஞ்சமேனும் இதில் சொன்ன அர்த்தங்களில் ஸம்சயிக்க இடமில்லை. 'பாரிட முன்படைததா னென்பரால் பாரிட மாவானும் தானுனல்' என்று பெரிய திருவந்தாதியிலும் அருளிச்செய்தார்.

இதே மாதிரியாகவே பல சமபங்கள் கற்ற தைம் மகத்தில் வந்து உதித்த மழிசைப்பரனும் மெய்ம் மிகுத்த திருச்சந்த விருத்தப் பாடலில்—

"பூநிலாய வைந்துமாய்ப் புனற்க ணின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகா லிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ணநின்னை யார் நினைக்க வல்லரே"

[பூநிலாய—பூமியில் வர்த்திக்கிற, இப்படியே மேலும். ஐந்துமாய்—சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்கள் ஐந்துமாய், புனல் கண் நின்ற—ஜலத்தில் உள்ள, நான்குமாய்—கந்தம் தவிர மற்ற நாலு வஸ்துவாய், தீ நிலாய மூன்றுமாய்—தேஜஸ்ஸில் வர்த்திக்கிற சப்த ஸ்பர்ச ரூபங்கள் மூன்றுமாய், சிறந்த கால்—வாயுவில் இருக்கிற, இரண்டுமாய்—சப்த ஸ்பர்சாத்மக இரண்டுமாய், மீநிலாயது ஒன்றுமாகி—ஆகாசத்தில் வர்த்திக்கிற சப்தமாய், வேறு வேறு தன்மையாய்—தேவாதிகளுமாய், நீ நிலாய வண்ணம்—சிதசித் சரீரகனுக கார்ய காரண வர்க்கத்திலே நிற்கிற ப்ரகாரம், நின்னை—ஜகதுபாதானமான உன்னை, யார் நினைக்கவல்லரே—(வேதாந்திகளைக் காட்டிலும்) வேறு யார் அறியவல்லர்?] என்று முதற்பாட்டிலேயே ஜகதுபாதானத்வ நிமித்தத்வத்தைப் பேசி, அது வேதாந்திகள் தவிர மற்றொருவருக்கும் நிலமல்ல (அதாவது வேதாந்திகள் தவிர மற்றெவரும் உன்னுடைய ஜகதுபாதானத்வாதிகளை அறியார்)என்று அருளிச்செய்தார். இவ்விடத்தில் 'யார் நினைக்க வல்லரே!' என்றதற்குப் 'பரமாணுக்கள் உபாதான காரணம் என்று வைசேஷிகர்களும், ப்ரதானம் உபாதான காரணம் என்று ஸாங்க்யர்களும், நிமித்தோபாதானங்களுக்குப்பேதம் உண்டெனச் சொல்லும் சைவர்களும், சிதசிதீச்வர தத்வத்ரயங்களும் ப்ரும்ஹ பரிணாமமென்ற பேதாபேதிகளும், நிர்விசேஷ வஸ்து வ்யதிரிக்தங்கள் அபாரமார்த்திக மென்ற மாயாவாதிகளும் நினைக்க முடியாமல் வேதாந்த ப்ரமே

யம் கைப்பட்டார்க்கு நினைக்கும்படியா யிருக்கிறாய்' என்று பெரியவாச்சான் பிள்ளை முதலானோர் பாவ வர்ணநம் பண்ணி யிருக்கிறார்கள். இப்படி உபாதாந காரணத்வத்தைச் சொல்லி ப்ரஸக்த்பா ஸர்வாந்தராத்மத்வாதிகளைச் சொல்லி, பத்தாம் பாட்டிலே ஸத்ருஷ்டாந்தமாகப் பின்வருமாறு நிகமித்தார்:—

"தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின்க ணின்றதே"

[தன்னுளே திரைத்து எழும்—அபிவ்ருத்தமாகும், தரங்கம் வெண்—அலைகளையும் வெண்மையையும் உடைத்தான, தடம் கடல்—விசாலமான ஸமுத்ரமானது, தன்னுளே—தனக்குள்ளே, திரைத்து எழுந்து—கிளர்ந்து மேலெழுந்து, அடங்குகின்ற தன்மைபோல்—அடங்குகின்ற ஸ்வபாவம் போலே, நின்னுளே—உன் ஸ்வரூபத்திற்குள்ளே, பிறந்து—பிறந்து, இறந்து—இருக்கிற, நிற்பவும்—ஸ்தாவரங்களும், திரிபவும்—ஜங்கமங்களும் நின்னுளா—உன் பக்கலிலே, அடங்குகின்ற நீர்மை—அடங்குகின்ற (இந்த) ஸ்வபாவமானது, நின்கண்—உன்னிடத்தில், நின்றது—நின்றது. அதாவது இவ்வுபாதாந காரணத்வம் வ்பக்த்பந்தரத்தில் நாஸ்தி என்றதாயிற்று.] இந்தத் தமிழ் வேதத்தில் ச்ருதியில் சொன்ன த்ருஷ்டாந்தம் போதாது என்று திருவுள்ளத்தால் சிதசித்துக்கள் தன் ஸ்வரூபத்தில் அடங்கியிருக்கச் செய்தேயும் பரஸ்பர தர்ம ஸங்க்ராந்தியில்லையென்பதற்கும் த்ருஷ்டாந்தத்தைக் காட்டி யருளினார். ஆகையால் இந்த த்ருஷ்டாந்தத்தை நோக்கினும் ஜகதுபாதாநத்வம் ஸித்தம். இதற்கு மேல் பாட்டுகளிலும் ப்ரஸக்தாநு ப்ரஸக்த்பா ஜகதுபாதாநத்வத்தை அருளிச்செய்திருக்கிறார். மற்றச் சமயங்கள் பல தெரிந்தவரான இவ்வாழ்வார் பாடலை 'மெய்ம் மிகுத்த' என்று விசேஷித்து நம் தேசிகன் அருளிச்செய்தார். நான்முகன் திருவந்தாதியிலும் 'நீயே யுலகெல்லாம்' என்றும் 'நீயே எரிசுடரும் மால்வரையும் எண்டிசையு மண்டத் திருசுடரு மாயவிவை' [நீயே உலகெல்லாம். இதையே பிரித்துச் சொல்லுகிறார். நீயே எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத் திருசுடரும் இத்யாதி இவையாய பதார்த்தங்கள் நீயே] என்று,

"வானுலவு தீவளி மாகடல்மா பொருப்பு
தானுலவு வெங்கதிரும் தண் மதியும்—மீனிலவு

கொண்டல் பெயரும் திசை யெட்டும் சூழ்ச்சியும்
அண்டந் திருமா லகைப்பு."

[வான்—ஆகாசமும், உலவு தீ—ஜ்வலிக்கிற நெருப்பும், வளி—வாயுவும், மா கடல்—பெரிய ஸமுத்ரமும், மா பொருப்பு—பெரிய மலைகளும், தான் உலவு வெம் கதிரும்—ஈச்வர ப்ரேரிதனாய்த் தான் ஸஞ்சரிக்கிற ஸூர்யனும், தண் மதியும்—குளிர்ந்த சந்த்ரனும், மீனிலவு கொண்டல்—மேலே ஸஞ்சரிக்கின்ற மேகமும், பெயரும்—நாமங்களும், திசை எட்டும்—எட்டுத் திசைகளும், சூழ்ச்சியும்—ஆவரணமும், அண்டம்—ஏதத்ரூபமான அண்டமும், திருமால்—ச்ரிய꞉ பதியினுடைய, அகைப்பு—எழூச்சி. எழுச்சி யென்று பொருளாய் எழூச்சி ஸங்கல்பத்தினால் உண்டாயது என்னவுமாம். ச்ரிய꞉ பதியே இப்படி ஆயிருக்கிறான் என்று உபாதாநத்வமும், அன்றியே அகைப்பு—ஸங்கல்பத்தினால் உண்டாயது என்று பொருளாய் நிமித்தத்வமும் ஏற்படுகிறது.] என்றும் அருளிச்செய்தார்.

(இன்னும் வரும்.)

# கலி மகிமை.

[ஸ்ரீ. உப. வித்வாந் தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்.]

க்ருதம் த்ரேதை த்வாபரம் கலி என வழங்கப்பட்டு வரும் நான்கு யுகங்களுக்குள் மூன்று கால்களும் முறிந்து நடக்கச் சக்தியில்லாமல் ஒற்றைக் காலுடன் தரையில் புரண்டுகொண்டிருக்கும் தர்ம வ்ருஷபத்தின் துரவஸ்தையைக் கண்ணுற்ற புராதந மஹர்ஷிகள் இந்தக் கலியுகத்தை மஹா கொடிய யுகமென்று இகழ்ந்திருக்கிறார்கள். மற்ற யுகங்களில் நெடுங் காலத்தினால் ஸித்தி யடைய வேண்டிய யஜ்ஞம் தாநம் தபஸ் இவைகளெல்லாம் இந்த யுகத்தில் விரைவாக ஸித்தித்து அபீஷ்ட பலன்களைக் கொடுக்கும் திறமையுள்ளவைகளாக ஆகிறபடியால், இந்த யுகத்தை மற்றும் சில மஹான்கள் ஒருவாறு நல்ல யுகமென்றும் புகழ்ந்திருக்கின்றார்கள். "ஸவெ-உ யஃஉ-ஊ꞉ கூ)தெஜாதா ஸ்வெ-உ,நஷா꞉ கூ(ளய-ெமெ" என்கிற வ்யாஸ மஹர்ஷியின் உக்தியை அநுஸரித்து இந்த யுகத்தில் தர்மங்கள் முற்றிலுமே அழிந்து விட்டன. எல்லா அநர்த்தங்களுக்கும் காரணம் யாதெனில், தர்ம லோப மொன்றே. இந்தக் கலி மஹிமையினால் பசுப்போல் பகுத்தறிவற்ற ப்ராணிகள் 'இது நன்மை இது தீமை' என்றாவது, 'இது தர்மம் இது அதர்

மம்' என்றுவது, 'இது ஹிதம் இது அஹிதம்' என்றுவது அறிவதற்குச் சக்தி அற்றவர்களாக ஆய்விட்டார்கள். "க்ஷுத்ருட் நித்ரா பயஸ்த்ரீஷு ஸாதாரண்யேத தேஹினாம். யஸ்தத்வவிதேஷா தயிகோவிசேஷோ யஸ்தேன ஹீநா: பசுபி ஸமாநா: ॥" என்று அறிஞர்களும் கூறி யிருக்கின்றனர். 'இது செய்யத் தக்கது, இது செய்யத் தகாதது,' 'இது நன்மையைப் பயக்கத்தக்கது, இது தீமையை விளைவிக்கக்கூடியது,' 'இது கைக்கொள்ளத் தக்கது,' இது விலக்கத்தக்கது' என்று விஷயங்களை நன்றாக நிரூபித்துக் காட்டி உலகில் உள்ளோர் அனைவரையும் உஜ்ஜீவிக்கச் செய்வதில் கருத்துள்ள வேதங்கள் சாஸ்த்ரங்கள் இதிஹாஸங்கள் புராணங்கள் மற்றுமுள்ள புண்ய கதைகள் அனைத்தும் ப்ரமாண மார்க்கத்திலிருந்து விலக்கப்பட்டு மின்னெளிபோல் ஒரு நொடியில் மறைந்து விட்டன. ஜகத்ப்ரகாசகங்களான வேதசாஸ்த்ரங்கள் மறைந்து போகவே, அஞ்ஜானமாகிற இருள் வீக்கம் எங்கும் பாவி நன்னெறிகள் மறைந்து போயின. காவ்யாதர்சத்தில் "இதமந்தம் தம: க்ருத்ஸ்நம் ஜாயேத புவநத்ரயம். யதி சப்தாஹ்வயம் ஜ்யோதிராஸம்ஸாரம் ந தீப்யதே ॥" என்று தண்டியாசார்யனும் இவ்விஷயத்தைக் கணிசித்தே பகர்ந்திருக்கின்றார். அதுபோல உலகில் எல்லா ஐஹிக ஸுகங்களுக்கும் ஆமுஷ்மிக ஸுகத்திற்கும் ஸாதநங்கள் வாங்மயங்களே. அந்த வாங்மயங்களுக்குள் சிறந்தது வேதம். அதற்கு அடுத்தது ஸ்ம்ருதி; அதற்கு அடுத்தது சிஷ்டாசாரம். ஜகத்துக்கு க்ஷேமத்தை விளைவிப்பதில் பத்த தீக்ஷங்களாக இருக்கிற முற் கூறப்பட்டுள்ளவை அனைத்தும் இக் கலிமஹா புருஷ வைபவத்தால் விரட்டி அடிக்கப்படவே, அந்தோ! அந்தணர்கள் அனைவரும் மற்றவர்களுக்குச் செந்தணல் போலாயினர். சிஷ்டர்கள் ப்ரஷ்டர்கள்போல் வருந்துகின்றனர். உலகமே உச்சநீசமாக ஆகித் தடுமாறுகின்றது. "ஜ்யோதிஷம் வ்யவஹாரஞ்ச ப்ராயச்சித்தம் சிகித்ஸகம். வினா சாஸ்த்ரேண யோ ப்ரூயாத் தமாஹுர் ப்ரஹ்மகாதகம் ॥" என்கிற அபிஜ்ஞசிகாமணிகளின் வசநங்கள் இக் கலியுக ஸ்மார்த்தாக்களுக்கு அப்ரமாணங்களாக ஆயின. ஆயிரம் மாதா பிதாக்களுக்கு ஸமாநமாக அதிக வாத்ஸல்யத்தை ப்ராணி வர்க்கங்களின் மீது காண்பிக்கின்ற வேத மாதாவும் இக் கலியுகத்திலுள்ள புதல்வர்களால் அவமதிக்கப்பட்டு விட்டாள். இவைபோன்ற அநேக விஷயங்கள் இக் கலியுகத்தில் ஸம்பவிக்குமென்றே மஹர்ஷிகள் கூறி இருக்கின்றனர். ஸ்ரீ விஷ்ணு புராணத்தில், ஆறுவது அம்சத்தில், மைத்ரேயர் ஸ்ரீ பராசர மஹர்ஷியை நோக்கி "கலே: ஸ்வரூபம் பகவந் விஸ்தராத் கதுமர்ஹஸி. யஸ்மின் ஸ்வல்பேன காலேன ப்ராப்யதே ஸுமஹத் பலம் ॥" என்று கேட்க, ஸ்ரீ பராசர மஹர்ஷியும்

கலியின் கொடுமையை இரண்டு அத்யாயங்களால் எடுத்து ஸவிஸ்தாரமாகக் கூறி இருக்கிறார். அவற்றுள் சில முக்யமான அம்சங்களை மட்டும் எடுத்துக் காட்டுகிறேன்.

“ 𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌚𑌾𑌰𑌵𑌤𑍀 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌨 𑌕𑌲𑍌 𑌨𑍃𑌣𑌾𑌂 । 𑌨 𑌸𑌾𑌮𑌰𑍍𑌗𑍍𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣 𑌵𑌿𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌦𑌨𑌹𑍇𑌤𑍁𑌕𑍀 ॥ 𑌵𑌿𑌵𑌾𑌹𑌾 𑌨 𑌕𑌲𑍌 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌃 𑌨 𑌶𑌿𑌷𑍍𑌯𑌗𑍁𑌰𑍁𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 । 𑌨 𑌦𑌾𑌮𑍍𑌪𑌤𑍍𑌯𑌕𑍍𑌰𑌮𑍋 𑌨𑍈𑌵 𑌵𑌹𑍍𑌨𑌿𑌦𑍇𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 𑌕𑍍𑌰𑌮𑌃 । 𑌯𑌤𑍍𑌰 𑌕𑍁𑌤𑍍𑌰 𑌕𑍁𑌲𑍇𑌜𑌾𑌤𑍋 𑌬𑌲𑍀 𑌸𑌰𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 𑌕𑌲𑍌 । 𑌸𑌰𑍍𑌵𑍇𑌭𑍍𑌯 𑌏𑌵 𑌵𑌰𑍍𑌣𑍇𑌭𑍍𑌯𑍋 𑌯𑍋𑌗𑍍𑌯𑌃𑌕𑌨𑍍𑌯𑌾 𑌵𑌰𑍋𑌧𑌨𑍇 । 𑌯𑍇𑌨𑌕𑍇𑌨 𑌚 𑌯𑍋𑌗𑍇𑌨 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑌿 𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑌃 𑌕𑌲𑍌 । 𑌯𑍈𑌵𑌸𑍈𑌵 𑌚 𑌮𑍈𑌤𑍍𑌰𑍇𑌯 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌕𑌲𑍌 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 । 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌕𑌲𑍌 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌯𑌦𑍍𑌵𑌚𑌨𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜 । 𑌦𑍇𑌵𑌤𑌾𑌶𑍍𑌚 𑌕𑌲𑍌 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑌃 । 𑌭𑌰𑍍𑌤𑌾 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌕𑌲𑍌 𑌵𑌿𑌤𑍍𑌤𑌵𑌾𑌨𑍇𑌵 𑌯𑍋𑌷𑌿𑌤𑌾𑌂 । 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 𑌕𑌲𑍌 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑍍𑌵𑍈𑌰𑌿𑌣𑍍𑌯𑍋 𑌲𑌲𑌿𑌤𑌸𑍍𑌪𑍃𑌹𑌾𑌃 । 𑌅𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌵𑌾𑌪𑍍𑌤𑌵𑌿𑌤𑍍𑌤𑍇𑌷𑍁 𑌵𑌰𑍍𑌤𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑍍𑌪𑍃𑌹𑌾𑌲𑌵𑌃 । 𑌅𑌨𑌾𑌵𑍃𑌷𑍍𑌟𑌿𑌭𑌯 𑌪𑍍𑌰𑌾𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌃 𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌭𑌯𑌕𑌾𑌤𑌰𑌾𑌃 । 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌤𑌦𑌾 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌗𑌗𑌨𑌾𑌸𑌕𑍍𑌤𑌦𑍃𑌷𑍍𑌟𑌯𑌃 । ”

[இவைகளின் சுருக்கமான பொருள்:—இந்தக் கலியில் வர்ணாச்ரமாசாரங்களை அநுஷ்டிப்பதிலும் வேதோக்த தர்மங்களை ஆசரிப்பதிலும் ஒருவருக்கும் எண்ணமுண்டாகாது. தர்ம்யமான விவாஹம் கிடையாது. குரு சிஷ்ய க்ரமமும் இல்லை. தம்பதிகள் இருக்க வேண்டிய முறை, அக்நி, பரிசர்யை, யாகம் இவைகள் ஒன்றும் கிடையாது. இழி குலத்தில் பிறந்திருந்தாலும், எவன் பலமுள்ளவனோ அவன்தான் ப்ரபுவாக ஆகிறான். எந்த வர்ணத்தில் பிறந்திருந்தாலும், அவன் எந்த வர்ணத்தைச் சேர்ந்த பெண்ணையும் விவாஹம் செய்யத் துணிவான். கலியில் எவன் எதைச் சொல்லுகிறானோ அது சாஸ்த்ரம். கலியில் எல்லாம் தேவதைகள். எல்லாம் எல்லோருக்கும் ஆச்ரமங்கள். ஸ்த்ரீகளுக்குப் பொருளுள்ளவர்கள் கணவர்கள். ஸ்த்ரீகள் கலியில் குல மர்யாதையை மீறி நடப்பவர்களாகவும், அழகுள்ளவர்களிடத்தில் ஆவலுள்ளவர்களாகவும் ஆகிறார்கள். மனிதர்கள் அந்யாய மார்க்கத்தினால் பொருளைத் தேடுவதில் ஆவலுள்ளவர்களாக இருப்பார்கள். மழை இல்லாமையினால் ப்ரஜைகள் பயம் மேலிட்டவர்களாகவும் பசியினால் வருந்துகின்றவர்களாகவும் இருப்பார்கள். மழை வருமா வருமாவென்று ப்ரஜைகளெல்லாம் ஆகாயத்தை நோக்கி அண்ணாந்து கொண்டே இருப்பார்கள்.] இப்படிச் சொன்ன ஸர்வஜ்ஞரான மஹர்ஷியின் வாக்கு வீணாக

ஆகுமோ? “ஶுஷ்கதர்காந்தஹி ஸாரம் நாஶ்யஞ்சம் ஸாமந்யவதப்தே । க்ஷீணாம் ஸந்நராஷ்ட்ராதம் ஸாஅஶயேஷா நஶ்யாவதி” என்றல்லவோ ஸர்வஜ்ஞர்களுடைய வசநம். இங்குக் கீழ் எடுத்து உதாஹரிக்கப்பட் டிருக்கிற ரிஷி வசநங்களை யதார்த்தங்களாகச் செய்வதற்காகவே சில போலி மஹாத்மாக்கள் இப்பொழுது அவதரித்து விட்டார்கள். இவர்களுடைய வ்யவஹாரங்களில் சில முக்ய விஷயங்களை மாத்ரம் எடுத்துக் கூறத் துணிகிறேன். ஸ்தாலீபுலாக ந்யாயமாக மற்றவைகளை ரஸிகர்கள் தெரிந்து கொள்ளலாம். கலிமஹாராஜாவின் ப்ருத்யர்கள் சொல்வதாவது:—ஜாதி வ்யத்யாஸம் கூடாது. வர்ணாச்ரம தர்மங்களென்பது யாரோ படித்தவர் சிலர் ஸ்வய நலம் பாராட்டி எழுதிக் கொள்ளப்பட்டவைகள்; முற்றிலும் அவைகள் வெறுக்கத் தக்கவைகள். தங்களை மேன்மைப்படுத்திக் கொள்வதற்காகவே மற்றவர்களைப் படிப்பில்லாமல் பசுவாக ஆக்கிவிட்டார்கள். புருஷர்களுக்குப் போலவே ஸ்த்ரீகளுக்கும் ஸ்வாதந்த்ர்யம் கூடும். அன்னவர்கள் புருஷர்களுக்கு அடிமையல்ல; ஸமாநமான அந்தஸ்துள்ளவர்கள்தாம். புருஷனுக்கு மூத்த தாரம் தவறிவிட்டால் மறுபடியும் ஸ்த்ரீகளை மணந்து கொள்வது போல், ஸ்த்ரீகளும் தமது கணவன் தவறிவிட்டால் மீண்டும் வேறு கணவனை மணந்து கொள்வதில் என்ன ஆக்ஷேபணை யிருக்கிறது? தேரடியில் மஹோத்ஸவ ஸமயங்களில் பள்ளு பறை சக்கிலி ப்ராம்மணர்கள் எல்லோரும் ஜாதி பேதமின்றி ஒன்று கூடுவதுபோல, எப்பொழுதுமே எல்லா ஜாதியரும் வ்யத்யாஸமின்றி ஒன்று கூடி இருப்பதே ஏற்றது. அப்பொழுது தான் இந்த நமது தாய் நாடு முன்னேற்ற மடையும். தர்ம சாஸ்த்ரங்கள் அந்நாளுக்கு ஏற்றவண்ணம் எழுதப்பட்டன. அவைகள் இக்காலத்துக்கு ஏற்றவைக ளல்ல; ஸமயத்திற்குத் தக்கவண்ணம் அவைகளைப் புதிப்பிக்க வேண்டும். வீடு கட்டினால் அடிக்கடி ரிபேர் செய்வதுபோல் பண்டை நாட்களில் செய்யப்பட்ட இந்த •க்ரந்தங்களையும் புதியவர்கள் தக்கபடி சீர்திருத்த வேண்டும். செம்மறியாடு போல் முன்னோர்கள் போன வழியே ஏனையர் செல்வது மனிதர்களுக்கு அழகல்ல. இது ம்ருகத் தன்மையைக் காட்டும். ஸ்திரீகளும்கூட பெருஞ்சுமை போன்ற கூந்தல் பாரத்தைத் தாங்கவேண்டுவதில்லை. இக்காலத்து நாகரிகத்தை அநுஸரித்துக் கத்தரியினால் ஒழுங்காகக் கத்தரித்துக் கொள்ளலாம்.

இப்படிப்பட்ட துருபதேசங்களைச் செய்பவர்கள் மஹான்களாம். இவர்கள் வார்த்தைகளை வேத வாக்யங்களைப்போல் கேட்டு ஆதரிக்கிறார்கள் சிலர். எவ்வித ந்யாயங்களை எடுத்துக் காட்டினாலும் இந்த மூடர்களுடைய புத்தி திரும்புவதில்லை. அவர்களையே பலபடியும் கொண்டாடுகிறார்கள். அவர்கள் வார்த்தையைக் கேட்கிறார்கள். அவர்களுக்குத் தான் உதவி புரிகின்ற

னர். அவர்களோடு தான் உல்லாஸமாக உலாவுகிறார்கள். அவர்களையே கௌரவிக்கிறார்கள். அதிகமாகச் சொல்வதால் யாது பயன்? அவர்களையே பேசுந் தெய்வமாகப் பாவிக்கிறார்கள். தெய்வப் பிறப்பு வாய்ந்தவர்களென்றே செய்கையினாலும் காட்டுகின்றனர். ஐயோ! பாவம்! இப்படிப் பட்ட கஷ்டம் இந்திய பூமிக்கு வந்ததற்கு யாது காரணமென்று ஆராய்ந்து பார்க்குமிடத்து, தெய்வ வ்யாகோபமென்றே சொல்லத் துணிகிறேன். இந்தக் கலி மஹா புருஷ மத தேசிகர்களுக்குள் ஒரு மஹா புருஷர் இங்கு திருசிரபுரத்தில் விஜயம்செய்து நாஷனல் காலேஜில் சற்று நேரம் வந்திருந்து ஸபையில் உள்ளோர்களைப் பார்த்துச் சொன்ன சொற்களாவன:—

"ஏ! ஹிந்து மதாபிமானிகளே! என்னைக் குறித்து இப்பொழுது ஸம்ஸ்க்ருத பாஷையினால் ச்லோகங்களை இயற்றி வந்த நோபசாரப் பத்ரிகையைப் படித்தீர்களே. இதன் கருத்து யாருக்காவது விளங்கிற்று? இல்லையே. ஆகவே இந்தப் பாஷையில் பயில்வது வீண் தானே. இனி, இதுபோன்ற பாஷைகளில் பயின்றுவரும் வழக்கத்தை விட்டு விட்டு, ஹிந்தியில் உழைத்து வாருங்கள். எல்லா நன்மையையும் அடைவதற்கு அதுதான் உங்களுக்கு ராஜ மார்க்கம். தரித்ர நாராயணன் இதோ வந்திருக்கிறான். இவன் வறுமைத்தனத்தை நீக்குங்கள். கையை நீட்டுகிறான்" என்று சொல்லிக் கையை நீட்டினவுடன் அங்கிருந்த பிள்ளைகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து 1750 ரூ. நோட்டுக்க ளடங்கிய ஒரு மணி பர்ஸை அவர் கையில் கொடுத்தார்கள். மறுதினத்தில் புத்தூர் மைதானத்தில் ஒரு கூட்டம் கூட்டி 5000 ரூபாயைக் கொடுத்தார்கள். லாலு குடியில் 2000 ரூ. கொடுத்தனர். ஆக இரண்டு தினங்களுக்குள் அவருக்குக் கிடைத்தது ரூ. 10000. இப்படிக் கொடுத்தவர்களுக்கு அவர் என்ன உதவி புரிந்தார்? இவர்கள் கொடுத்ததையாவது அவர் மதித்தாரா? ஒன்றுமில்லை. இவர்களாவது அவர் யோக்யதையை இன்னதென்று அறிந்து கொண்டார்களா? அதுவும் இல்லை. "மஹாஜநோ யேந கத: ஸ பந்தா:" என்று சொல்லுகிறபடி யாரோ ஒருவன் போகிறானென்று எல்லோரும் அவனைப் பின்தொடர்ந்து சென்றார்களே ஒழிய, உண்மையை ஒருவனும் அறிந்து செய்தானில்லை. இத்தகைய மௌட்யம் நிறைந்த உலகில் கலி மஹாநுபாவனுடைய மஹா மந்த்ரிகள் எந்த ஆட்சியைத்தான் செய்யார்கள்? எல்லாம் ஸம்பவிக்கத் தக்கதே. வர்ணாச்ரம தர்மங்கள் அவ்வளவாக ஆதரிக்கத் தக்கனவல்ல. அசுத்தர்களாகவும் மத்யம் மாம்ஸம் இவைகளைப் புஜிக்கிறவர்களாகவும் இருக்கும் வேறு ஜாதியர்களை அணுகக் கூடாது, தொடக் கூடாது என்பது தப்பாம்.

அவர்களுடன் நெருங்கிப் பழகுவது தான் மனிதத்தன்மைக்கு அழகு என்று மஹாத்மாக்கள் சொல்லும் பிதற்றல்களை வேத வாக்யங்கள் போலெண்ணிப் பேதைகள் களிக்கிறார்களே! இவர்களுக்கு, அசேதனங்களாக இருக்கிற மரம் செடிகளுக்கு இருக்கும் அறிவு கூட இல்லையே! வீட்டுக்குப் புறம்பாக இருக்கும் தீட்டுக்காரிகள் பக்கலில் அணுகினாலும், அவர்களுடைய நிழல் தாக்கினாலும் உடனே அடியோடு காய்ந்து போகிற கருவேப்பிலை மரங்களையும் கொடி மல்லிகைச் செடிகளையும் பார்த்தாவது இந்தப் புத்தி ஈனர்கள் இந்த விஷயத்தில் தெரிந்து கொள்ளலாகாதா? சாஸ்த்ரத்தில் செப்பிய விதி நிஷேதங்களுக்குக் கட்டுப்படாத உயிரில்லாத மரம் செடி கொடிகள் கூட இவ்வண்ணம் தீண்டாமையை ஆதரித்து மண்ணுலகில் மகிழ்ந்து வாழக் கண்ணுற்றிருக்க, எவ்வண்ணம் சாஸ்த்ர வச்யர்களான சேதநர்கள் தீண்டாமையை விலக்கலாம்? எல்லோரும் ஸமமாக இருக்க வேண்டும் என்பது ஈச்வரனுக்கே ஸம்மதமன்று. வேறுபாடு ஒவ்வொரு விஷயங்களிலும் இருப்பது ஆவச்யகமே. உலகத்தில் ப்ரஹ்ம ஸ்ருஷ்டியே அப்படி அமைந்துள்ளது. நாம் நன்றாகக் கவனிப்போமேயானால் இது ஒன்றே நமக்கு ஈச்வரனுடைய அபிப்ராயத்தைத் துலக்கிக் காட்டுகிறது. அது எது என்று வினவினால், உலகின்கண் வஸித்துவரும் ஒவ்வொரு மனிதனுடையவும் வேற்றுருவமே. எல்லா ப்ராணிகளுக்கும் கை கால் மூக்கு நாக்கு செவி முதலிய இந்த்ரியங்களும் உறுப்புக்களும் பொதுவாக இருந்த போதிலும், ஒவ்வொன்றிலும் வேற்றுமையே குடி கொண்டிருக்கிறது. இதை நிதர்சநமாகக் கொண்டே உலகில் வேற்றுமைப்பாடென்பது ஈச்வரனுடைய ஸங்கல்பமென்று அறியத்தக்கது. ஆதலால் ஜாதி வர்ணாச்ரம ஸம்பந்தமான வேறுபாடு கால்பநிகமென்று சொல்பவர்களின் பேத்தல் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்த்ர்யம் அவச்யமிருக்கவேண்டுமென்று சொல்லும் புத்திசாலிகளுடைய வசநம் எந்த மட்டில் ஸரி என்பதைக் கவனிப்போம். ஸ்த்ரீகளுடைய ஸ்வபாவத்தையும் இயற்கை அமைப்பையும் கவனித்தே தர்ம சாஸ்த்ர கர்த்தாக்கள் அந்த ஜாதிக்குப் பாரதந்த்ர்யம் தான் தகுந்ததென்றும், ஒரு ரக்ஷகனுக்கு உட்பட்டே இருக்கவேண்டுமென்றும் வ்யவஸ்தையைச் செய்து பெரியோர்கள் உலகத்தை நிலை நிறுத்தி இருக்கின்றார்கள். அவ்வாறான நிலைமையில் அந்த ஜாதியைக் கட்டுப் படுத்தியிருப்பதால் கற்பழியாமல் ஸத்ஸந்ததியானது இது சமயம் உலகத்தில் வ்ருத்தியடைந்து வருகிறது.

நமது நாகரிகத்துக்கும் மேனாட்டு நாகரிகத்துக்கும் எத்தனையோ வாசி உண்டு. நமது நாகரிகம் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வந்துள்ளது; எக்காலத்திலும் நமக்கு ஹிதகரமானது; வைத்ய சாஸ்த்ரத்திற்கும் ஸதாசார நூல்களுக்கும் மிகப் பொருத்தமுள்ளது; ஒருவராலும் அருவருக்கத் தக்கதல்ல; நமது நாகரிகவாழ்வு, அன்பர்கள் யார் பார்த்தாலும் கேட்டாலும் சந்தோஷிக்கத் தக்கது. நாமும் இப்படியே ஆசரிக்க வேண்டுமென்று ஆசையை உண்டுபண்ணும் தன்மை வாய்ந்துள்ளது; கால வைஷம்யத்தால் நம் இந்தியர்களுக்கு அயல் தேசத்து ஜநங்களின் நடை உடை பாவனைகள் சிறந்தவைகளென்றும், மிக்க நாகரிகமுள்ளவைகளென்றும், நம்முடையவை அஸாரங்களென்றும் மனத்தில் தோன்றி இருக்கின்றது. எல்லாம் வல்ல இறைவன்தான் இந்த அநர்த்தகரமான மதிமயக்கத்தை நீக்கி நல்லறிவு புகட்டத் திறமையுள்ளவன். “ நஹி ஜாத வந்து ஷ்டீவ தேகஸ்ய அநுஸந்ததி” என்கிற வசநத்தை உள்ளத்தில் கொண்டு பகவத் கருணையை எதிர் பார்த்திருக்கிறோம். எந்தப் பாஷையில் தர்மங்கள் ஆசாரங்கள் அநுஷ்டாநங்கள் முதலியவை ஸவிஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றனவோ அந்தப் பாஷையை முகர்ந்துகூடப் பார்க்கத் திறமையில்லாத ஒரு மனிதனை உபதேஷ்டாவாகப் பாவித்து அவன் காலடியிலிருந்துகொண்டு ஸநாதந தர்மங்களை ஜனங்கள் கேட்பதென்றால் இதைவிட உலகத்துக்குத் தீமை வேறு என்ன வேண்டும்? இப்படிப்பட்ட துராசாரங்களையும் துர்மதங்களையும் போதிக்கிறவருக்கு ‘ மஹாந் ’ என்ற பிருதைக் கொடுத்த மஹாந்கள் எவர்களோ அறியோம்! கலியின் அபிவ்ருத்திக்கு அடையாளம் யாது என மைத்ரேயர் வினவ, பராசரர் “ யதா யதா ஹி மைத்ரேய ஹாநிர்தர்மஸ்ய லக்ஷ்யதே। ததா ததா கலேர் வ்ருத்தி ரநுமேயா மஹாத்மபி:। யதா யதா ஸதாம் ஹாநிர் வேதமார்கானுஸாரிணாம்। ததா ததா கலேர் வ்ருத்தி ரநுமேயா விசக்ஷணை: ॥ ” என்றார். [இவற்றின் பொருள்: “மைத்ரேய! எந்தெந்தக் காலத்தில் தர்மத்துக்கு ஹாநி உண்டாகுமோ அந்தந்தக் காலத்தில் கலியின் வ்ருத்தியானது மஹாத்மாக்களால் ஊஹிக்கத்தக்கது. வேத மார்க்கத்தை அநுஸரித்து நடப்பவர்களான ஸாதுக்களுக்கு எந்தெந்த ஸமயங்களில் ஹாநி உண்டாகுமோ அந்தந்த ஸமயங்களில் ஸமர்த்தர்களால் கலியின் வ்ருத்தியானது ஊஹிக்கத் தக்கது.] இதற்கு முன் கேட்டிராததும் கண்டிராததுமான விஷயங்களின் ஸம்பவமானது கலியின் அபிவ்ருத்தியை நன்கு விளக்கிக் காட்டுகிறது. மஹர்ஷிகள் ஸர்வஜ்ஞர்களன்றோ? அந்த மஹாபுருஷர்கள் வாக்கு வீணாக ஆகுமோ? வஸிஷ்டருடையவும் புலஸ்த்யருடையவும் விசிஷ்டாநுக்ரஹத்தினால் பரதேவதா பாரமார்த்ய ஜ்ஞாநத்தையும் புராண ஸம்ஹிதா கர்

த்ருத்வ சக்தியையும் பெற்ற ஸ்ரீபராசர பகவான் திவ்ய சக்ஷுஸ்ஸால் பின் வரப்போவதை நன்கு உணர்ந்து முந்தியே தமது க்ரந்தத்தில் எழுதி யிருக்கிற விஷயங்களன்றோ இவை? கலி மஹா புருஷனுடைய கிங்கரர்கள் தங்களுடைய செய்கைகளால் பராசர பகவானை ஸர்வஜ்ஞரென்று கொண்டாடும்படி செய்ததற்காக இவர்களிடத்தில் நாம் நன்றி பாராட்டுவோமாக.

இவ்வண்ணம் இந்த யுகமானது இகழத்தக்கதாக இருந்தபோதிலும், தர்மமானது அத்யல்பமாகச் செய்யப்பட்ட போதிலும், இக்காலத்தில் பெரும்பயனை விளைவிக்கிற தாதலால் இவ்யுகம் மிக்க புகழ்வாய்ந்ததென்றே மஹர்ஷிகள் கூறியிருக்கின்றனர். மேலும், முறையே க்ருதம் த்ரேதை த்வாபர யுகங்களில் த்யானம் ஜபம் யஜ்ஞம் இவைகளால் எந்தப் பலன் நெடுங் காலத்தினால் ஸித்திக்குமோ அந்தப் பயனானது இந்தக் கலியினல் பகவானுடைய நாம ஸங்கீர்த்தந ரூபமான அல்பாயாஸத்தினுல் ஸித்திப்பதால் இந்தயுகம் மிகப் புகழத்தக்கதென்றும் அபிஜ்ஞர்கள் கூறி இருக்கின்றனர். மேலும் "யொஷித ஸ்ஸாயு யதூா:" என்று ஸ்ரீ பராசர பகவான் கூறி யிருக்கிறார். ஏனெனில் அதிகமான சரீராயாஸத்தினுலும் த்ரவ்யத்தாலும் ஸாதிக்கத்தகுந்தவைகளான ச்ரௌத ஸ்மார்த்த கர்மங்களையும் நியம விசேஷங்களையும் வ்ரதோபவாஸாதிகளையும் ப்ராயச்சித்தங்களையும் புருஷர்களைப்போல் செய்யாமலே எளிதில் த்ரிகரணங்களால் செய்யப்படும் பர்த்ரு சுச்ரூஷையினுலேயே பரலோகத்தில் பர்த்ரு ஸாலோக்யத்தை அடைவதாலும், இம் மண்ணுலகுக்கும் 'தர்ம பத்நீ, பதிவ்ரதை' என்கிற கீர்த்தியைப் பெறுவதாலும், ஸ்திரீ ஜந்மம் இக்காலத்தில் மிகச் சிறப்புற்றது. "ஹஉயூஷூாந ஙயஉஒகஉஒவிதஜெ: உஉஉா ந ஹஉாஸநம் ஸாஸஸொஉ முறாடி ஹூ ஶிவிஶுய: ஸாஜி ஸ்வாநா உவி। ஸவஉாஉாய வஅஸூாவநவிநம் ஸஂஸ்ூாஸஉஅஉா வியெ ஙயஉா ஸாஜ நிமஒஹஒவி ஹஉஹா நயஉாவஹொயம கஷி:।" என்று இக்கலியின் கொடுமையைக் கண்டு பயந்த ஒரு மஹா புருஷன், உள்ளது உள்ளபடி இக் கலியை நன்கு அநுபவித்துத் தான் அநுபவித்தவண்ணம் இக்கலியின் மஹிமையை இந்த ச்லோகத்தால் வெளியிட்டார். ஆகவே நான், ஆஸ்திகர்கள் அனைவர்களையும் நோக்கி, இக் கலிகால கோலாஹலத்தி லிருந்து நம்மையும் நம்மவர்களையும் காப்பாற்றிக் கொள்வதற்கு உரித்தான வழி எது உண்டோ அந்த வழியில் நாமும் நடந்து கொள்வதுடன், நம்மவர்களையும் நடப்பிக்க வேண்டும் என்றும், "யஉதூா அஉதிஜெஷு: தத்தெவெதஜொ ஜந:। ஸ யஷ்ூாணம் கஉஉஉதெ ஜொகஷூ உநுவதஉதெ" என்கிற கீதாசார்யனுடைய வசநத்தை உள்ளத்தில் நன்றாகப் பதியச் செய்து கொண்டு, நம்முடைய வர்ணுச்ரம தர்மங்களையும் குல தர்மங்களையும்

ஜாதி தர்மங்களையும் சிஷ்டாசாரங்களையும், தொன்று தொட்டு நம்மால் ஆண்டு வரப்பட்ட நடை உடை பாவனைகளையும், இவைகளிலும் முக்யமான சிகா யஜ்ஞோபவீத தாரணங்களையும் தவறாமல் காப்பாற்றி வருவதில் ச்ரத்தை இருக்கவேண்டுமென்றும், முக க்ஷௌரம் ஆத்ம க்ஷௌரம் அபோஜ்ய போஜநம் அபேயபாநம் அஸப்ருச்ய ஸ்பர்சநம் முதலிய துஷ்க்ருத்யங்களைத் தவறாமல் விலக்கி, எக்காலத்திலும் ஹிதகரமான காயத்ரீ மஹாமந்த்ர ஜபத்தையாவது உரிய காலங்களில் செய்துகொண்டு, ஸ்வதர்மங்களில் நிலை பெற்றுப் பூமி தேவர்கள் நீடூழி காலம் வாழ்ந்திருக்கும்படி எல்லா மறிந்த ஸர்வேச்வரன் கருணை புரியவேண்டுமென்று அநவரதம் பரமபுருஷனை ப்ரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன் என்பதை வணக்கத்துடனும் பக்தியுடனும் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# *ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை உபந்யாஸ ஸங்க்ரஹங்கள்.

## (1) ஸ்த்ரீ தர்மம்.

பகவத் ஸ்ருஷ்டி நான்கு விதம். அவையாவன: தேவர்கள், மநுஷ்யர்கள், திர்யக்குகள், ஸ்தாவரங்கள். ப்ரளயத்தில் உறைமெழுக்குப் போன்றிருக்கும் ஜீவாத்மாக்களை, அவைகள் உஜ்ஜீவித்து மோக்ஷஸாம்ராஜ்யம் பெறும்பொருட்டுப் பரமாத்மா அவைகளின் பூர்வ கர்மாநுரூபமாக தேஹேந்த்ரியாதிகளைக் கொடுத்து மேற்சொன்னபடி ஸ்ருஷ்டிக்கிறான்; பஞ்ச மஹா பாதகிகள் முதலானவர்களை இருள் சூழ்ந்த ஜ்ஞாநமில்லாத ஜந்மாக்களான புல் பூண்டுகளாகவும், அதிற் குறைந்த பாபிகளை அவைகளைக் காட்டிலும் மேன்மையான பசு பக்ஷி ஊர்வன முதலிய திர்யக்குகளாகவும், புண்யவான்களை விவேகத்தோடு கூடின மநுஷ்யர்களாகவும், அதிலும் உத்க்ருஷ்ட புண்யம் செய்தவர்களை தேவ ஜாதிகளாகவும் ஸ்ருஷ்டிக்கிறான். மேற்சொன்ன நான்கு ஸ்ருஷ்டிகளிலும் ஸ்த்ரீ புமாங்கள் என்கிற பேதமுண்டு. ஜீவாத்ம ஸ்வரூபங்களில் "நைவ ஸ்த்ரீ ந புமாநேஷ:" என்கிற உபநிஷத்தின்படி ஸ்த்ரீ புமாங்கள் என்கிற பேதம் கிடையாது.

* கோயம்புத்தூரில் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் 23—11—27லும், 24—11—27லும் செய்யப்பட்டவை.

கலியுகத்தில் ஸ்திரீ ஜந்மம் ஒருவாறு உயர்ந்ததென்றே சொல்ல வேண்டும். ஸ்ரீ வ்யாஸ பகவான் கங்கையில் ஸ்நாநம் செய்துகொண்டிருக்கும் பொழுது கலியுகத்தின் கொடுமைக்குப் பயந்து ஸம்சயம் கேட்கவந்த மஹர்ஷிகளுக்கு "கலி ஸாது:", "ஶூத்ர ஸாது:", "ஸ்த்ரிய ஸாத்வ்ய:" என்று சொன்னார். ஏனென்றால் எந்தத் தர்மாநுஷ்டானத்தை க்ருத யுகத்தில் பத்து வர்ஷம் செய்தால் புண்யமும் புருஷார்த்தமும் லபிக்குமோ அதையே த்ரேதாயுகத்தில் ஒரு வர்ஷத்திலும், த்வாபர யுகத்தில் ஒரு மாஸத்திலும், கலியுகத்தில் ஒரே நாளிலும் செய்தால் கிடைக்கும். எந்தப் பலத்தை த்ரைவர்ணிகர்கள் கடினமான வர்ணாச்ரம தர்மங்களைச் செய்து கர்மயோக ஜ்ஞாந யோகத்தோடு கூடின பக்தியை ஆச்ரயித்து ஸாதிக்கவேண்டியதோ அதை சூத்ர ஜாதியில் பிறந்தவன் எளிதில் ஆர்த்தியுடன் செய்யப்படும் நாம ஸங்கீர்த்தநத்தால் ஸம்பாதிக்கிறான் ஆகையால் சூத்ர ஜந்மம் உயர்ந்தது. எந்தப் பலத்தை மேற்கூறியபடி விசேஷ ச்ரத்தையுடன் புருஷன் செய்து ஸம்பாதிக்க வேண்டியதோ அது பதிசுச்ரூஷை முதலான பாதிவ்ரத்யத்தால் எளிதில் ஸ்த்ரீகளுக்கு லப்தமாவதால் ஸ்த்ரீ ஜந்மா உயர்ந்ததாகும்.

புருஷர்களுக்கு அவச்யம் செய்யவேண்டுமவையான ஷட்கர்மங்கள் ஸ்த்ரீகளுக்கு வேண்டுவனவில்லை. ஆத்ம க்ஷேமத்தை உத்தேசித்த ஸுமங்கலிகள் கங்கை முதலிய தீர்த்த யாத்ரை, திவ்ய க்ஷேத்ரங்களுக்குப் போய் அர்ச்சாவதார வைபவங்களை ஸேவிப்பது, வைதிக மந்த்ர ஜபம் (அஷ்டாக்ஷர ஜபம் உபதேசம் பெற்றவர்கள் செய்ய வேணும்) தபஸ், வேத மந்த்ரங்களுடன் பகவதாராதநம், யாகம் முதலியவைகளை அநுஷ்டிக்கக் கூடாது. பதியுடன் அவருடைய சுச்ரூஷைக்காக ஸஹகாரியாயிருந்து இவைகளை அநுஷ்டிப்பது உசிதம். "ஸ்த்ரீணாம் பவித்ரம் பரமம் பதிசேவா விசிஷ்யதே" என்கிறபடி பதி சுச்ரூஷையே ஸர்வ பாபங்களையும் போக்கி ஸகல வித ச்ரேயஸ்ஸையும் ப்ராபிக்கும். ஸ்த்ரீகள் முதலானோர் வேதோச்சாரணம் செய்யக்கூடாதாதலால், அவர்களுடைய உஜ்ஜீவநத்திற்காக வேதார்த்த கும்பிதங்களான பாரதத்தை ஸ்ரீ வேதவ்யாஸரும், திருவாய்மொழி ப்ரபந்தங்களை ஆழ்வாராசார்யர்களும் அருளிச் செய்தார்கள். ஸுமங்கலிகள் ஸூர்யோதயாநந்தரம் ஸ்நாநம் செய்யவேண்டும்; ஏகாதசி உபவாஸம் இருக்கக்கூடாது. இருந்தால் "ஆயுஷ்யம் ஹரதே பத்யு:," "நரகம் வ்ரஜேத்" என்கிறபடி ப்ரத்யவாயங்களும் ஸம்பவிக்கும். கீதையில் 'என்னை ஆச்ரயிக்கிற ஸ்த்ரீ மோக்ஷத்தை அடைகிறாள்' என்பதின் அர்த்தம், தங்களுக்கநுரூபமான தர்மாநுஷ்டாநத்துடன் கூட ஈச்வரனை ஆச்ரயித்தால் மாத்ரம் மோக்ஷம் ஸித்திக்கும் என்பதே யொழிய பர்த்ரு சுச்ரூஷாதிகளை விட்டு ஈச்வரனை யாச்ரயித்தால் மோக்ஷம் லபிக்காது என்பதல்ல. இதைக் கீதையில் 18-வது அத்யாயத்தில் "ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத:" என்பது முதலாக ஸ்ரீ கீதாசார்யன் வெளியிட்டிருக்கிறான். இது தர்ம சீலைகளான அருந்ததி த்ரௌபதி முதலியவர்களின் சரிதங்களால் விளங்கும். "பர்துஸ்ஸுக்ருதஸ்யார்த்த ஹாரிண்ய: பதிஶுஶ்ரூஷயைவ ஹி" என்கிற ஸ்ம்ருதி வசநத்தின்படி பர்த்தா செய்யும் புண்யங்களில் பாதி பத்நிக்குக் கிடைப்பதுடன் "பதிஹாரம் ஸ்த்ரீக்ருதம் பாபம்" என்கிறபடியே இவளுடைய பாபங்கள் முழுவதும் புருஷனை யடைகிறது. ஆகையால் தான் சாஸ்த்ரங்களில்

ஸ்த்ரீகளுக்கு, இக்காலத்தார் விரும்பும் அதிகமான ஸ்வாதந்த்ர்யம் கொடுக்கப்படவில்லை. இப்படி "ஸுகிதஸ்ய ஹி தாதாரம்" என்கிறபடி ஸ்த்ரீகளின் பாபங்களை யெல்லாம் வாங்கிக்கொண்டு தன் பாதி புண்யத்தையும் கொடுக்கும் புருஷனை யார்தான் பூஜிக்க மாட்டார்கள்? "ஸதாம் அ வருந்தாநாம் த்ருணவாந் நிமந்த்ரணோவி வா । யதஃம் விரூபஸாநாநாம்" என்கிறபடி பர்த்தா நற்குணங்களில்லாதவனாகவும், தரித்ரனாகவும், ப்ரியமில்லாதவனாகவும், "கண்டா ரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும் கொண்டானை யல்லால் அறியாக் குலமகள் போல்" என்கிற அருளிச் செயலின்படியே கண்டா ரிகழத்தக்க விதம் பரிபவம் செய்தாலும் கொண்டவனை ஏத்திச் சுச்ரூஷை செய்வது பதிவ்ரதையின் கடமை. அப்படிச் செய்தால் தான் பகவான் ஸ்த்ரீகளுக்கு அநுக்ரஹம் செய்கிறார். பதிவ்ரதையின் லக்ஷணம் "ஸுதஷ்டாதேஷு ஹ்ஷ்டா ஹரஷெ வ்ரோஷிதே ஹுிநா க்ருஶா । ஹுதே ம்ரியெத யா நாரீ ஸா ஸ்த்ரீ ஜ்ஞேயா பதிவ்ரதா", "ஸததம் தெவவத்பதி:" என்பவை. இப்படியே நடந்துவந்த ஸீதாபிராட்டியைப் போன்றவர்கள் பதிவ்ரதையாவதுடன், "ப்ராணே ஹ்யாவி மரியஸீ" என்கிறபடியே ஸஹதர்ம சாரிணியானதால் தார்மிகரான பர்த்தாக்களால் புகழும் பெறுவார்கள்.

யுகாந்தரங்களில் ஸ்த்ரீகளுக்கு ஸந்த்யாவந்தநம் வேதாத்யயநம் தபஸ் உபநயநம் முதலியவை உண்டென்றும், புருஷன் இறந்தாலும், வஸிக்குமிடம் தெரியாமற்போனாலும், பதிதனானாலும், நபும்ஸகனாயிருந்தாலும் இஷ்டப்பட்டால் அவர்கள்வேறு கல்யாணம் செய்து கொள்ளலாமென்று மிருந்தது. ஆகையால் தான் யாஜ்ஞ்யவல்க்யருடைய இளைய பார்யையான கார்க்கி என்பவள் அச்லீலமான ஸம்பத்து மோக்ஷத்தைக் கொடுக்காதென்று பர்த்தாவினிடம் தெரிந்து, அவர் ப்ரவ்ரஜிக்கு முன் அவர் சொத்தில் பாகம் வேண்டாமென்று மூத்த பார்யையான காத்யாயநிக்கு அதை விட்டுவிட்டு மோக்ஷஸாதநமான ப்ரம்ஹ வித்யையை அப்யஸித்தாள் என்று உபநிஷத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஹநுமான், அசோகவநத்தில் நதிக்கரைக்கு ஸந்த்யாவந்தநம் செய்ய ஸீதை வருவாள் என்று எதிர் பார்த்ததுக்கும் இதுவே காரணம். சாண்டிலி என்பவள் ஜுகுப்ஸிதமான ஓர் இடத்தில் தபஸ்செய்து கொண்டிருந்ததைப் பார்த்து, அவளை வேறு நல்ல இடத்திற்குக் கொண்டு போய்விட உத்தேசித்த கருடாழ்வானுக்கு இறக்கைகள் வெந்து உதிர்ந்தன. நாரத பகவான் "அப்படி எண்ணுவது கூடாது; ப்ருஹ்ம வித்தான ஸ்திரீகளோ புருஷர்களோ இருக்குமிடமே புண்யக்ஷேத்ரம்; ஆகையா லவர்கள் வஸிக்குமிடத்தை இகழ்வாக நினைப்பதுமே அபசாரமாகும்:" என்றும் "அதன் பலனை நீர் நேரில் அநுபவித்தீர்" என்றும் கருடனுக்கு உபதேசித்தார். விவாஹமில்லாமல் ப்ரம்ம வாதிநிகளாக ஸ்த்ரீகள் இருக்கலா, மென்பது யுகாந்தரங்களி லுண்டு.

மஹாபாரதம் ஆரண்ய பர்வத்தில், 16000-க்கு மேற்பட்ட பார்யைகளையுடைய ஒரு பர்த்தாவை, ஸந்தோஷப்படுத்த முடியாத அவர்களுள் ஒருத்தியான ஸத்யபாமை, "ஐந்து பர்த்தாக்களுக்கும் பத்நியாக இருந்து எல்லாரையும் ஸந்தோஷப் படுத்துவது எப்படி? எந்த மணி மந்த்ர ஔஷதங்களால் நீ ஸாதிக்கின்றாய்? என்று த்ரௌபதியைக் கேட்டபொழுது, "மணியால் ஜ்ஞாநிகள் மோஹிக்க மாட்டார்கள்; மந்த்ர ப்ரயோகத்தால் பர்த்தாவுக்கு சித்த ப்ரமம் உண்டாகும்; மருந்தால் வ்யாதியும் மரணமும் ஏற்

படும்; ஆகையால் இவைகளால் விபரீதம் ஸம்பவிக்குமே யல்லது பர்த்தாவை ஸ்வாதீனம் செய்துகொள்ள முடியாது. ஆகையால் க்ருஹத்தில் கொண்டுவந்து போடப்படும த்ரவ்யம் சாமான்கள் இவைகளிலும், மாமியார் அதிதிகள் வைதிக க்ருத்யங்கள் இவைகளில் பர்த்தாவின் எண்ணப்படி நடந்து கல தேச வர்த்தமானத்தை யொட்டிப் பதி சுச்ருஷை செய்வதும், அஸூயை இல்லாமல் சக்களத்திகளை நடத்துவதும், இவை முதலான நல்ல கார்யங்களால்தான் பர்த்தாக்களுடைய ப்ரியத்தை ஸம்பாதிக்க வேணும்" என்று சொன்னாள். "க்ருஹிணீ க்ருஹமுச்யதே" என்று சொல்லுகிறபடி வீட்டிற்குள் ஸ்த்ரீயேதான் எஜமானி. "யத்ர ஸ்த்ரீ பூஜ்யதே ரமதே தத்ர ஸ்ரீ:" என்றும், "ஸததம் ஸாம்யம் தம் ஸாபேக்ஷா" என்றும், "பூஜா பூஜயிதவ்யா அ ஸம்ஷணார்த்த நாமபிநை:" என்றும் சொல்லுகிறபடி 'எந்த க்ருஹத்தில் ஸுமங்கிலி ஸ்த்ரீகள் தங்கள் சக்திக்கு ஏற்ற நல்ல நகைகளாலும் வஸ்த்ரங்களாலும் நல்ல வார்த்தைகளாலும் மரியாதையுடன் ஆதரிக்கப் படுகிறார்களோ அந்த இடத்தில் லக்ஷ்மி வஸிக்கிறாள். அப்படி இல்லாத வீடு சூன்யம் வைத்த வீடு போலாகும்' என்று மநு சொல்லி யிருக்கிறார். ஆனாலும், ஸ்த்ரீகள் சஞ்சல புத்தியுள்ளவர்களும், அதிக காம ஸ்வபாவங்களை யுடையவர்களும், தம்மைக் காப்பாற்றிக் கொள்ளச் சக்தியற்ற அபலைகளு மாதலால் ஸ்வதந்த்ரர்களாய் அவர்கள் மனம்போனபடி யெல்லாம் விடக்கூடியவர்க ளல்லர். இவைகளை யுத்தேசித்தே ஸ்த்ரீகள் கௌமாரத்தில் பிதாவினிடமும், யௌவநத்தில் பர்த்தாவினிடமும், வார்த்தகத்தில் புத்ரனிடமும் அடங்கி இருக்க வேண்டுமென்று மநு சொன்னாரேயொழிய அவர்களை நிர்ப்பந்தப்படுத்த வேண்டுமென்றாவது ஸுகாநுபவங்களைக் குறைக்கவேண்டு மென்றாவது மஹர்ஷிகளில் ஒருவரும் சொல்லவில்லை.

ஸ்த்ரீகள் ஸன்மார்க்கத்தினின்று தவறிவிட்டாலும் மூன்றுதரம் அவர்களுக்கு ஸத்புத்தியை உபதேசித்து லகு ப்ராயச்சித்தங்களைச் செய்தல் வேண்டும்; பின்னும் அவர்கள் தவறி நடந்தால் அப்போது அவர்களை நீக்கி வேறு கலியாணம் செய்துக்கொள்ள வேணுமே யொழிய முதல் இரண்டு தடவைகளிலேயே அவர்களை விட்டுவிடக் கூடாது. (புருஷன் தவறி நடந்தால் அவனுக்கு முதல் தடவையிலேயே தகுந்த சிக்ஷைகளும் ப்ராயச்சித்தங்களும் விதிக்கப்பட்டிருக்கின்றன.) ஆகையால், ஸ்த்ரீகள் தவறி நடந்தால் அவர்களைத் தள்ளிவிடவேணு மென்றாவது புருஷர்கள் தவறி நடந்தால் ப்ரத்யவாயமில்லை யென்றாவது எண்ணுவது தவறு. "ஸுசீலாம் விநதாம் ஸாத்வீம் வஸிதவ்யஜேக! ஸப்த ஜந்ம ஸவே ஸ்த்ரீத்வம் வைதவ்யம் அவாப்நோதி" என்றபடி நதிஷ்டையாயும் சொன்னபடி நடப்பவளும் யுவதியுமான பார்யையை ஒருவன் தள்ளிவைத்து வேறு விவாஹம் செய்துகொண்டால் அவன் ஏழுதடவை ஸ்த்ரீ ஜன்மத்தை எடுத்து அடிக்கடி விதவையாகக் கஷ்டங்களை யநுபவிக்க ப்ராப்தம்.

இதிஹாஸங்களில் அநேக பதிவ்ரதா ஸ்த்ரீகளுடைய விருத்தாந்தங்கள் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. விவாஹ திநம் அருந்ததியை ஸப்தரிஷிக் கூட்டத்தில் நக்ஷத்ர மண்டலத்தில் வதூவரர்களைப் பார்க்கச் சொல்வது அவள் மஹா பதிவ்ரதையானதால் அவள் மாதிரி பதியை அநுவர்த்திக்க வேணுமென்பதைக் காட்ட. அநஸூயை 12 வருஷ க்ஷாமத்தில் எல்லோரும் மிக வருந்தும் காலத்தில் தன் தபஸ்ஸால் கங்கையையும் தாங்யாதிகளையும் தன் ஆசிரமத்தில் வரவழைத்து அவர்கள் க்லேசத்

ணைப் போக்கினள். மஹா பதிவ்ரதையானதால் இப்படிச்செய்தல் கூடும். த்ரௌபதியின் பாதிவ்ரத்யத்துக்கும் பக்திக்கும் கட்டுப்பட்டுக் கண்ணபிரான் துயிலை வளர்த்த வைபவம் பாரதத்தில் ப்ரஸித்தம். இன்னும் பாதிவ்ரத்ய மஹிமையால் இறந்த பர்த்தாவைப் பிழைப்பு ஊட்டின ஸாவித்ரி முதலான மஹா பதிவ்ரதா சிரோமணிகளுடைய சரித்ரங்களால் நல்ல ஸ்த்ரீகளுக்குள்ள வைபவம் ப்ரஸித்தமாகும். ஆகையால், ஸுமங்கலிகளான ஸ்த்ரீகளுக்குப் பாதிவ்ரத்யமாகிற ஒரு தர்மமே இந்த லோகத்தில் விசேஷ ஸௌக்யத்தையும் மேன்மையையும் கொடுத்துப் பரலோகத்திலும் அளவற்ற ஆநந்தங்களைத் தருகிறது.

## (2) கர்மாநுஷ்டாநம்.

'கர்மாநுஷ்டாநம் செய்ய வேண்டியது அவச்யமா? கர்மாநுஷ்டாந மில்லாமலே மோக்ஷத்தை யடைய முடியுமா?' என்கிற விஷயத்தை விசாரிப்பதாக ஆரம்பித்து, முதலில் நமது பிரமாணங்களில் கர்மாநுஷ்டாந மில்லாமலே பக்தி ஜ்ஞாநாதிகளால் மோக்ஷமடையலாம் என்று தோன்றுவதால் அதை விமர்சிக்க வேண்டியது அவசியம் என்று சில பூர்வபக்ஷங்களைச் செய்து, அவைகளின் கண்டந ரூபமாய் ஸித்தாந்தங்களை ஸ்தாபிக்கிறோம்.

"तमेवं विद्वानमृत इह भवति नान्यः पन्थाः" என்று உபநிஷத்துக்களிலும், "भक्त्या त्वनन्यया शक्यः" என்று கீதாதிகளிலும் பக்தியே மோக்ஷ காரணமாக அறுதி இடப்படுவதாலும், "ऋषयः किल कावषेयाः किमर्था वयमध्येष्यामहे किमर्था वयं यक्ष्यामहे" என்று கவஷி சிஷ்யர்கள் கர்மத்தை விட்டிருப்பதாகத் தெரிவதாலும், ஸ்ரீ கீதையில் "सर्वं कर्माखिलं पार्थ ज्ञाने परिसमाप्यते" என்று ஜ்ஞாநத்துக்காகவே கர்மாநுஷ்டாந செய்யவேணும் என்று சொல்வதாலும், "पाण्डित्यं निर्विद्य बाल्येन तिष्ठासेत्" என்று ச்ருதிகள் எல்லாக் கர்மங்களையும் விட்டுக் குழந்தைகளைப் போலிருக்க விதிக்கையாலும், ஸ்ரீ சுகர் ரிஷப தேவர்கள் கர்மாநுஷ்டாநங்களை விட்டு அவதூதர்களாய்த் திரிந்ததாக ஸ்ரீபாகவதாதிகளில் காண்கையாலும், உத்தவகீதையிலும் 'त्यज धर्ममधर्मं च', "तस्मात्त्वमुद्धवोत्सृज्य चोदनां प्रतिचोदनाम्' என்றும், "सर्वधर्मान् परित्यज्य" என்றும் கர்மாநுஷ்டாநங்களை விட்டிருக்க விதித்திருக்கையாலும், கர்மாநுஷ்டாநத்துக்கு யோக்யமில்லாத ஸ்த்ரீ முதலானவர்களும் தன்னை ஆச்ரயித்து மோக்ஷம் பெறலாமென்று "मां हि पार्थ व्यपाश्रित्य" என்பது முதலான ச்லோகங்களில் கீதாசார்யன் அருளிச் செய்திருப்பதாலும், சாஸ்த்ரவச்யரல்லாத கஜேந்த்ரனும் பக்தியால் முக்தியடைந்ததாக "भक्त्या तुतोष भगवान् गजयूथपाय" என்று ஸ்ரீ பாகவதத்தில் அருளிச் செய்திருப்பதாலும், கர்மாநுஷ்டாந ப்ரஸக்தி சூந்யங்களான புல்லெறும்பாதிகளுக்கும் மோக்ஷ கொடுத்ததாக ஸ்ரீமத்ராமாயணாதிகளில் காண்பதாலும், இதை ஆழ்வான் "स्वाराधनस्तवयः" என்று கர்மாநுஷ்டாந மன்றிக்கே இருக்க, திர்யக் ஸ்தாவரங்களுக்குச் சரண்யன்

மோக்ஷம் கொடுத்ததாக அநுவிதித்திருப்பதாலும், இன்னும் பல ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் 'தாம் வாடவாடத் தவஞ்செய்ய வேண்டா'' வென்று கர்மாநுஷ்டாநத்தை நிஷேதித்தது போல் காண்பதாலும், மோக்ஷார்த்திகளான பக்த ப்ரபந்நர்களுக்குத் தர்மாநுஷ்டாநமாவசியகமன்றென்று சிலர் ப்ரமிக்கலாம். இதற்கு ஸமாதாநம்:ச்ருதி கீதாதிகளில் பக்தியாலேயே மோக்ஷம் பெறுவதாகச் சொல்லப்பட் டிருந்தாலும் அந்தப் பக்தியானது நித்ய கர்மாநுஷ்டாநத்தோடு கூடின கர்மயோகத்தை அங்கமாக வுடையதாகக் கீதையில் வ்யக்தமாக அருளிச் செய்திருப்பதால் கேவலம் பக்தியால் மோக்ஷம் ஸித்திக்க மாட்டாது. கவஷி சிஷ்யர்கள் மோக்ஷார்த்திக ளாகையால் காம்ய கர்மங்களைத் தாங்கள் அவலம்பிக்கவில்லை என்று சொன்னார்களே யொழிய நித்ய கர்மங்களைக்கூட விட்டிருந்ததாக அவ் வாக்யங்களிலில்லை. இது, " யக்ஷ்யாமஹே '' என்று யாகத்தை நிஷேதித்ததாகச் சொல்லுகிற வாக்யங்களினால் தெரியவருகிறது. " ஜ்ஞாநே பரிஸமாப்யதே '' என்கிற கீதா வாக்யத்தில், கர்மயோகமானது ஜ்ஞாந யோகத்தைப் பெறுவதற்காக அநுஷ்டிக்கப்படுவதாக ஸ்ரீ பாஷ்யகாரர் வ்யாக்யாநம் பண்ணி யிருப்பதால் இது நித்ய கர்மாநுஷ்டாநத்தை விடுவதற்கு ப்ரமாணமாகாது. " பால்யேந திஷ்டாஸேத் '' என்கிற ச்ருதியின் அர்த்தத்தை ஸ்ரீவேதவ்யாஸர் " அநாவிஷ்குர்வந்நந்வயாத் '' என்ற ப்ரஹ்ம ஸூத்ரத்தில், 'பக்தன் தன் மஹிமையை வெளிப்படுத்தாமல் இருப்பதே இங்குப் பால்ய சப்தத்தின் அர்த்தம்' என்று தீர்மானித் திருப்பதாலும் இப்படியே மூன்று பாஷ்யகாரர்களும் வ்யாக்யாநம் செய்திருப்பதாலும், நித்ய கர்மாநுஷ்டாநங்களை விட்டுக் குழந்தை போலிருப்பது பால்ய சப்தார்த்தமன்று. ஸ்ரீ ரிஷப தேவர் கர்மாநுஷ்டாநங்களை விட்டிருந்ததாகச் சொல்வது ஒரு ஸித்திவிசேஷம் என்று பூர்வோத்தர கதையால் தெரியவருவதாலும், சுகாதிகளும் கர்மாநுஷ்டாநங்களை விட்டிருப்பதாக வ்யக்தமாகச் சொல்லாததாலும், அம்மஹான்கள் ஒரு ஸமயம் விட்டிருந்ததாகத் தெரிந்தாலும், அதைப் பார்த்து நாம் கர்மாநுஷ்டாநங்களை விட்டு விடலாகா தென்பதை அதே பாகவதத்தில், ஸ்ரீ சுகரே "தேஜீயஸாம் வச: ஸத்யம் ததைவாசரிதம் க்வசித் । தேஷாம் யத் ஸ்வவசோயுக்தம் புத்திமாம்ஸ் தத் ஸமாசரேத்'' என்றும் மஹான்களுடைய விபரீதாநுஷ்டாநங்கள் அவர்களுக்குத் தகுமேயல்லது அதைப் பார்த்து நாம் அநுஷ்டிக்கத்தகாது என்று அருளிச்செய்திருக்கிறார். இவ்வர்த்தம் கௌதம ஸ்ம்ருதியில் " த்ருஷ்டோ தர்மவ்யதிக்ரம: । ஸாஹஸம் ச பூர்வேஷாம் தத் அந்வீக்ஷ்ய ப்ரயுஞ்ஜாந: ஸீதத்யவர: '' என்று சொல்லப் பட் டிருப்பதால் சுகர் போன்ற மஹான்களுடைய அநுஷ்டாநம் நம் தர்மத்தை விடுவதற்கு ப்ரமாணமாகமாட்டது. உத்தவ கீதையிலும் சொன்னது காம்யகர்ம விஷயம். கஜேந்த்ராதிகளும் புல்லெறும்பாதிகளும் ஜந்மாந்தரத்தில் ஸித்தியடைந்தவைக ளாகையால் விரோதமில்லை. ஸ்ரீகீதையில் சொன்னது ஸ்த்ரீ முதலானவர்களும் அவர்களுக்கு யோக்யமான கர்மாநுஷ்டாநத்துடன் கூட ஈச்வரனை யாச்ரயித்தால் மோக்ஷம் ஸித்திக்குமேயன்றி அதை விடுவதற்கு ப்ரமாணமாகாது. ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளில் பக்தியோகத்தை அநுஷ்டிக்க முடியாதவன், அதை விட்டு ப்ரபத்தியைப் பண்ணும்படி சொல்லியிருக்கிறதே யொழிய நித்யகர்மாநுஷ்டாநங்களை விடச் சொன்னபடியன்று. "காயோடு

நீடு கனியுண்டு ..............ஐந்து தீயோடு நின்று தவஞ்செய்ய வேண்டா'' என்கிற பாசுரத்தாலும் மற்றும் நித்யகர்மாநுஷ்டாநங்களைச் செய்தவரும் ப்ராம்மணர்களை ஸ்துதிக்கிற, ''திசைமுகனை யனையவர்கள் செம்மை மிக்க'' என்பது முதலான வாக்யங்களாலும் ஸித்தம்.

இது நிற்க, ஒருவனுக்கு ஜ்ஞாந பக்திகள் அதிகமாக இருந்தாலும், சாஸ்த்ரத்துக்குக் கட்டுப் பட்டே நடக்கவேணுமென்றும், விபரீதாசாரமுள்ளவன் எவ்வளவு பக்திமானாக இருந்தாலும் அவன் மோக்ஷத்தை யடையமாட்டானென்றும் ச்ருதி ஸ்ம்ருதிகள் உபதேசிக்கின்றன. சாந்தோக்ய உபநிஷத்தில் அச்வபதி என்கிற கேகயராஜனிடம் வைச்வாநர வித்யாப்யாஸத்திற்காகப் போன உத்தாலகர் முதலான ஆறு ப்ராஹ்மணர்களைப் பார்த்து மஹா ப்ரம்மவித்தான கேகயராஜன், தன் ராஜ்யத்தில் பாபிகளில்லாததால் தனக்குப் பாப ஸம்பந்த மில்லையெனவும், ஆகையால் தன்னிடம் ப்ரதிக்ரஹம் செய்யலாம் எனவும் சொன்னதினால் ப்ரம்மவித்துகளும் பாபத்துக்குப் பயப்பட வேண்டுமென்று ஏற்பட்டது. உஷஸ்தி என்னும் மஹா ப்ரஹ்ம வித்தானவர், ப்ராணாபத்தான ஸமயத்தில் சண்டாளன் சமைத்த கொள்ளை வாங்கிக் கொஞ்சம் சாப்பிட, அவரைத் தாஹத்துக்குக் கொஞ்சம் தீர்த்த மருந்தும்படி அவன் கேட்டபொழுது அது சாஸ்த்ரத்தைக் கடந்ததாகும்; கொள்ளைச் சாப்பிட்டது பிராணனைத் தரித்துக்கொள்ள' வென்றும் சொன்னதால் ப்ரம்ம வித்துக்களும் சாஸ்த்ரத்துக்குக் கட்டுப்பட்டு நடக்க வேணுமென்று ஏற்படுகிறது. ஸ்ரீ கீதாசார்யன் 18-ம் அத்யாய ஆரம்பத்தில், கர்மங்களை விடும் விஷயத்தில் சிலருடைய அபிப்ராயத்தைச் சொல்லி, ''யஜ்ஞதாந........'' என்று இரண்டு ச்லோகங்களினால் கர்மங்களை விடக் கூடாதென்பதே தன்னுடைய நிச்சயமான உத்தம அபிப்ராயமென்றும் ''நியதஸ்ய'' என்கிற அடுத்த ச்லோகத்தினால் நித்யகர்மங்களை விட்டவனைத் தமோ குணம் சூழ்ந்தவனென்றும் தூஷித்தான். ஈசாவாஸ்யோபநிஷத்தில் ''குர்வந்நேவேஹ'' என்கிற வாக்யத்தினால் தேஹம் விடுமளவும் கர்மங்களை விடாமல் பண்ணியே தீர வேணுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ''க்ரியாவாநேஷ'' என்று ப்ரஹ்ம வித்துக்களுக்குள் கர்மாநுஷ்டாநம் செய்பவனே மிகவும் உயர்ந்தவனென்று சொல்லப்பட்டது. கடவல்லி என்கிற உபநிஷத்தில் 'நாவிரதோ துச்சரிதாந்' (இந்த்ரியங்களை யடக்காமல் பாபம் செய்து கொண்டிருப்பவன் எவ்வளவு பக்திமானானாலும் ப்ரஹ்மத்தை யடையமாட்டான்) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் நித்ய நைமித்திக கர்மங்களை அநுஷ்டிப்பது தான் ஆஸ்திக க்ருத்யமாகும்.

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## சில ஸம்சயங்கள்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு:—

ப்ரபவஹூ கார்த்திகை மாஸத்திய வேதாந்ததீபிகையில் தேவனூர் விளாகம் ஸ்ரீ உபய லக்ஷ்மீ நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி எழுதியிருக்கிற 'பகவானுடைய ஜகத்காரணத்வம்' என்று தலைப்பிடப்பட்ட வ்யாஸத்தில் மூன்று ஸம்சயங்கள் என்னைப் போன்ற சிலர்க்குத் தோன்றி இருக்கின்றன. இவைகளைப் பற்றிக் கீழே ஸங்க்ரஹமாக எழுதி இருக்கிறேன். இந்த ஸம்சயங்களை அந்த ஸ்வாமிக்குத் தெரிவித்து அவற்றைத் தீர்க்கத்தக்க உத்தரங்களை அடுத்த தீபிகையின் வாயிலாக எல்லோரும் அறியும்படி வெளியிட ப்ரார்த்திக்கிறேன். அவைகளாவன:—“ப்ரஹ்மண: அபிந்ந நிமித்தோபாதாநத்வம் என்பதற்கு நிமித்தஞ்ச உபாதாநஞ்ச நிமித்தோபாதாநே, அபிந்நஸ்ய நிமித்தோபாதாநே அபிந்ந நிமித்தோபாதாநே, தயோர்பாவஸ்தத்த்வம். அபின்ன கார்யத்தை அதாவது ஒரே கார்யத்தைக் குறித்து நிமித்தமாயும் உபாதாநமுமாகை, ப்ரஹ்மத்தினிடமுள்ள ஒரே கார்யத்தைக் குறித்து நிமித்தமாயும் உபாதாநமாயுமிருக்கும் தன்மை என்பது பொருள்”, என்று அந்த ஸ்வாமி எழுதி இருக்கிறார். இதில் அபிந்ந நிமித்தோபாதாநத்வம் என்கிற ஸமஸ்த பதத்திற்கு விக்ரஹ வாக்யம் எழுதி இருப்பதும் சரியன்று; இதை விவரித்திருக்கிற வாக்யமும் ஸங்கதமாகத் தோன்றவில்லை. அபிந்ந கார்யத்தை அதாவது ஒரே கார்யத்தைக் குறித்து, என்று சொல்வது சரியா என்று அந்த ஸ்வாமியே நன்கு பராமர்சிக்க வேண்டும். இங்கு அபிந்நபதம் காரண வஸ்து பரமே ஒழிய கார்ய பரமன்று. உலகத்தில் ஒரு கார்யத்தைக் குறித்து உபாதாந காரணமாயும் இருக்கிற வஸ்துக்கள் வெவ்வேறாகவே காணப்படுகின்றன. இந்த விஷயத்தில் நிதர்சநமாக ஒரு குடத்தையும் வஸ்த்ரத்தையும் எடுத்துக்கொள்வோம். குடத்துக்கு உபாதாந காரணம் மண், நிமித்த காரணம் குயவன். இவ்வண்ணமாகவே வஸ்த்ரத்திற்கு உபாதான காரணம் பஞ்சு, நிமித்தகாரணம் சேனியன் இவ்வாறாகவே எங்கும் கார்யங்களுக்கு உலகத்தில் உபாதாந காரணங்களாக இருக்கிற வஸ்துக்களும் நிமித்த காரணங்களாக இருக்கிற வஸ்துக்களும் வெவ்வேறாகவே காணப்படுவதால், உபாதாநத்வம் நிமித்தத்வம் என்கிற இரண்டு தர்மங்களும் சேர்ந்திராதவைகளாக, அதாவது வ்யதிகணங்களாகவே எல்லோராலும் அநுபவிக்கப்படுகின்றன. வேதாந்த சாஸ்த்ரத்திலோ வென்றால் சிதசித்விசிஷ்டமான ப்ரஹ்மம் ஒன்றே ஜகத்ரூபமான கார்யத்தைக் குறித்து உபாதானமாயும் நிமித்தமாயுமிருப்பதால் கூறப்பட்டுள்ள உபாதாநத்வம் நிமித்தத்வம் இரண்டும் ப்ரஹ்மம் என்கிற ஒரு

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.


வஸ்துவினிடம் சேர்ந்திருப்பவைகளாக, அதாவது ஸமாநாதிகரணங்களாக அறியப்படுகின்றன. ப்ரஹ்மத்திற்கு இதுதான் அபிந்ந நிமித்தோபாதாநத்வம். ஆகவே அபிந்ந என்கிற பதம் கார்யபரமல்ல. காரண வஸ்துவையே குறிக்கிறது. இந்த அர்த்தமே வேதாந்த ஸம்ப்ரதாயஸ்தர்களுடைய திருவுள்ளத்துக்கு ஸமஞ்ஜஸமானது. தத்வ ப்ரக்ரியை இப்படி இருக்க, இதற்கு விருத்தமாக அபிந்ந பதத்தைக் கார்யபரமாகச் சொன்ன ஸ்வாமியின் கருத்தை அபிஜ்ஞர்கள் அறிய ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். விக்ரஹவாக்யம் 'ஜகத: நிமித்தம் ச தத் உபாதாநம் ச நிமித்தோபாதாநம் இதி விசேஷணோபய பதகர்மதாரய: ; அபிந்நம் ச தத் நிமித்தோபாதாநம் ச அபிந்ந நிமித்தோபாதாநம், விசேஷணம் விசேஷ்யேண பஹுலம் இதி ; தஸ்ய பாவ: அபிந்ந நிமித்தோபாதாநத்வம்'.

36-வது பக்கத்தில் "பஞ்சமிக்கு உபாதாநத்வம் அர்த்தமாகச் சொன்னால் பாதகமில்லை. தவிர, யோக விபாகமானது ஏதாவது ஜ்ஞாபக மிருந்தால் தான் ஆச்ரயிக்கலா மாகையால் யோக விபாகாத் பஞ்சமீ சொல்வதைக் காட்டிலும்". என்று எழுதப்பட் டிருக்கிறது. இதுவும் அஸங்கதம். 'ஜநிகர்து: ப்ரக்ருதி:' என்கிற ஸூத்ரத்திலுள்ள ப்ரக்ருதி என்கிற பதம் ஹேதுமாத்ரபரம் என்பது வ்ருத்திகாரருடைய மதம். உபாதாந மாத்ர பரமென்பது பாஷ்யகையட மதம். இந்த இரண்டு அபிப்ராயங்களுக்கு இணங்கியே மூலத்தில் 'ப்ரஹ்மண: ப்ரஜா: ப்ரஜாயந்தே' என்று உதாஹரிக்கப்பட் டிருக்கிறது. (1) ப்ரஹ்மா, ஹிரண்யகர்ப்பன். அவர் ஸர்வ கார்யங்களையும் குறித்து உபாதாந காரணமல்ல. இது வ்ருத்திகாரருடைய அபிப்ராயம். (2) ப்ரஹ்ம பரப்ரஹ்மம். இது ஸர்வ கார்யங்களையும் குறித்து உபாதாந காரணம்; இது பாஷ்ய கையட மதம். ஸூத்ரார்த்த மென்னவென்றால், ஜநிகர்த்ரு: உத்பத்திக்கு ஆச்ரயமாக இருக்கிற வஸ்துவுக்கு, எது ப்ரக்ருதியோ அதாவது ஹேதுவோ, அது அபாதாநம் என்கிற பெயரை அடைகிறது. அபாதான ஸம்ஜ்ஞை வந்தவுடன் 'அபாதாநே பஞ்சமீ' என்கிற ஸூத்ரத்தினால் பஞ்சமீ விபக்தி வருகிறது என்பது தத்வம். ஆதலால் எழுதி யிருக்கிறபடி பஞ்சமிக்கு உபாதாநத்வம் அர்த்தமன்று. பஞ்சம்யந்த பதத்தினால் வாச்யமான அர்த்தத்திற்கு அபாதாந ஸம்ஜ்ஞை வரின் அதற்கு வாசகமாக இருக்கிற பதத்தைக் காட்டிலும் பஞ்சமீ வருகிறது. இப்படி இருக்க பஞ்சமிக்கு உபாதாநத்வம் அர்த்த மென்பது பாணிநீய வ்யாகரண ப்ரக்ரியைக்கு இணங்காதது. வேறு எந்த வ்யாகரண ப்ரக்ரியையும் அபிஜ்ஞர்கள் இக்காலத்தில் ஒத்துக்கொள்ளார்கள்.

நிற்க, மேலும் 'யோகவிபாக மானது ஏதாவது ஜ்ஞாபக மிருந்தால்தான் ஆச்ரயிக்கலாம்' என்று எழுதி இருப்பதும் வையாகரண ஸம்ப்ரதாய விருத்தம். 'உபஸர்க்க யோகவிபாக:' என்பதுதான் பாதஞ்ஜல பாஷ்ய ரஹஸ்யம். அதாவது சாப்திக ஸம்ப்ரதாயத்தில் எல்லோராலும் விப்ரதிபத்தி யின்றி ஸம்ஹிதா பாடத்தினின்று தனித்தனியாக விபாகம் செய்யப்பட்டிருக்கிற ஸூத்ரங்களால் நிஷ்பந்நங்களான சப்தங்களைக் காட்டிலும் வேறுபட்டும் ஸம்ப்ரதிபந்நங்களாகவு மிருக்கிற

சில சப்தங்களுக்கு ஏற்கெனவே உள்ள ஸூத்ரங்களால் அநுசாஸநம் இல்லாமல் போகுமேயாகில், அப்படிப்பட்ட சப்தங்களுக்கு ஸாதுத்வ கல்பநணத்திற்காக வேறு இல்லாமையால் ஸுமதஸூர யோகவிபாகம் செய்து அதனுல் அந்த சப்தங்களைப் பொது சப்த கோஷ்டியில் சேர்த்துக்கொள்வது வழக்கம். படந பாடநங்களில் அபியுக்தர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற சப்தங்களுக்கு எந்த விதத்திலாவது ஸாதுத்வத்தைக் கல்பிப்பது தான் வையாகரணந சைலி. இஷ்ட ஸித்தியின் பொருட்டே யோகவிபாகமே ஒழிய தேவனுர் விளாகம் ஸ்வாமியின் அபிப்ராயப்படி 'ஏதாவது ஜ்ஞாபகமிருந்தால் தான் யோகவிபாகம் ஆச்ரயிக்கலாம்' என்பது ஒருவராலும் ஒத்துக்கொள்ளத்தக்கதன்று.

திருப்பிரபவ-ஸ்ரீ
17—12—1927

தட்டை வே. ஸ்ரீநிவாஸதாஸன்

---

ஸ்ரீ:

## புஸ்தக விமர்சம்.

### ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அநுக்ரஹித்துள்ள ஸ்தோத்ரங்கள்.

ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனுல் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள பகவத் ஸ்தோத்ரங்களை நாகர லிபியில், வெங்கடாத்ரி ஹரம் ஸ்ரீ. உப. பண்டித அநந்தாசார்ய ஸ்வாமி, ஒரு புஸ்தக ரூபமாக ப்ரசுரம் செய்திருக்கிறுர். நாம் பார்த்த வரையில் அந்த ஸ்தோத்ரங்கள் சுத்தமான பாடங்களுடன் கூடியவைகளாக இருப்பதாகவே தெரியவருகிறது. சில வருஷங்களுக்கு முன், இம்மாதிரியாகவே, ஸ்ரீ தேசிகனுடைய ஸ்தோத்ரங்களெல்லாம், நாகர லிபியிலேயே, ராயம்பேட்டை ஸ்ரீ. உப. பண்டித ஆர். வி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியால் ப்ரசுரிக்கப்பட்டன. அந்தப் புஸ்தகம் இப்பொழுது துர்லபமாகி இருக்க வேண்டுமென்றே நாம் நினைக்கிறேம். ப்ரக்ருத புஸ்தகத்தின் க்ரயம் ரூ 1—0—0. இதை அபேக்ஷிப்பவர்கள், "34, முத்துநாயக வீதி, நுங்கம்பாக்கம், மதராஸ்" என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

## ஸ்ரீ வை. ஸி. ஸபை வார்ஷிக மஹா ஸங்கம்.

சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் அடுத்த வார்ஷிக மஹா ஸங்கத்தை கோயமுத்தூரில் நடத்தவேண்டுமென்று ஸ்ரீமார் ஸி. வி. வெங்கடரமண அய்யங்கார் ஸ்வாமி அழைத்ததன்பேரில் மஹா ஸங்கத்தை ஏப்ரல் மாஸம் (ஈஸ்டர் விடுமுறையில்) அங்கு நடத்துவதாக நிர்வாக ஸபையார் தீர்மானித்திருக்கின்றனர். ஆகவே மஹா ஸங்கம் கோயமுத்தூரில் "தர்ம விலாஸ"த்தில் நடைபெறும். காலம் முதலிய மற்ற விவரங்கள் பின்னுல் தீபிகாபிமானிகளுக்கு அறிவிக்கப்படும்.

கார்யதர்சி.

ஸ்ரீ. வை. ஸி. ஸபை.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

---

யோऽந்த: ப்ரவிஸ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஸக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஸ்ச ஹஸ்தசரணஸ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

---

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**மஹாத்மா காந்தியும் வர்ண தர்மாநுஷ்டாதாக்களும்.**

"வஸந்தி வர்ணேஷு தோஷாந்ஸந்தோऽபி ஜநா: ஸந்தோऽபி நைவ மர்ணாந்". ஏற்கெனவே இரண்டொரு ஸமயங்களில் நாம் மஹாத்மா காந்தியின் உக்திகளையும் அபிப்ராயங்களையும் பற்றி ஸ்வல்ப நிர்வேதத்துடன் விமர்சிக்கும்படி ஸப்பவித்திருக்கின்றது. மறுபடியும் அவரைப் பற்றி அவ்விதமாகவே ப்ரஸ்தாவிக்கும்படி நேர்வதைக் குறித்து நாம் மிகவும் சோகிக்கிறோம். அவரிடம் அநேக ஸத்வ குணங்கள் மேலிட்டிருப்பதுடன், நமது சாஸ்த்ரங்களில் விச்வாஸமும் அந்தச் சாஸ்த்ர கர்த்தாக்களிடத்தில் மிக்க கௌரவ புத்தியும் அவருக்குப் பரிபூர்ணமாயிருக்கின்றன வென்று நாம் க்ரஹித்திருக்கிறபடியால், அந்த க்ரஹணத்திற்கு விருத்தமாயுள்ள சொற்கள் அவரிடமிருந்து வெளிவருகின்றன வென்பதை நாம் அறியும்பொழுது அவைகளைப் பற்றிப் பராமர்சிக்காமல் இருப்பது ஸாத்யமில்லை.

சென்ற மாஸத்தில் அவர், தமது பத்ரிகையில், வர்ண தர்மங்களைப் பற்றி ஒரு தத்வ விசாரம் செய்திருக்கிறார். அந்த விசாரத்தில், ஜனங்கள் எல்லாரும் வர்ண தர்மம் என்னும் ஒரு வ்யவஸ்தையைத் தமது ச்ரேயஸ்ஸை உத்தேசித்து அவச்யம் அநுஷ்டிக்கவேண்டுமென்றும், ஆனல் அந்த வ்யவஸ்தை பிறப்பைச் சார்ந்ததாக இல்லாமல் கேவலம் தொழில்களின் விபா

கத்தை மாத்ரம் சார்ந்ததாக இருத்தல் வேண்டுமென்றும், ஜநங்களுக்குள் வம்ச பரம்பரையாகத் தம் தமக்குக் கிடைத்திருக்கும் தொழில்களுக்கு எவ்வித கலக்கமும் நேராமல் இருப்பதே தேசத்திற்கு க்ஷேமகரமென்றும், ஆயினும் ஒருவன் தனது வர்ணத் தொழிலை த்யஜித்துவிட்டு மற்றொருவனுடைய வர்ணத் தொழிலைப் பரிக்ரஹித்தால் அதனால் அவனுக்கு எவ்வித பாபமும் நேராதென்றும், இன்னும் இவ்வாறு பல யுக்திவாதங்களைச் செய்துவிட்டு, கடைசியாக நமது தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் க்ஷோபத்தை விசாரித்து வருகையில், நம் தேசத்தில் வர்ண தர்மங்களைப் பரிபாலித்து வரும் ஹிந்துக்களெல்லாரும் தாம் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவர்களென்று எண்ணிக்கொண்டு அஹங்காரம் மதம் தர்ப்பம் முதலிய துஷ்ட மனோபாவங்களுக்குப் பரவசராகி மற்றவர்களை இகழ்ச்சியுடன் நடத்தி வருவதாலேயே இந்த க்ஷோபம் முழுவதும் ஜநித்திருக்கின்றதென்றும், பிறப்பினால் ஏற்படும் வர்ண வ்யத்யாஸத்தையும் அது ஸம்பந்தமாக வரும் அஸ்ப்ருச்யத்வம் முதலிய ஜாதி நியமங்களையும் நாம் பரித்யஜித்தால் இப்பொழுது காணப்படும் க்ஷோபம் நிவ்ருத்தமாகி நமக்குள் ஸௌஹார்த்தம் மறுபடியும் ஸ்தாபிதமாகி விடுமென்றும் அவர் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறார். இந்த விசாரத்தில் முதலிற் சொல்லப்பட்டுள்ள விஷயங்களைப் பற்றி நாம் இப்பொழுது விமர்சிக்க அவகாசமில்லை; வர்ண தர்மங்களை அநுஷ்டிப்பவர்களின் மீது அவர் கூறியிருக்கும் தூஷணத்தைப் பற்றி மாத்ரம் விசாரிக்கப் புகுகின்றோம்.

முதலில், நமது வர்ண தர்மாநுஷ்டாதாக்கள், பிறப்பினால் வர்ண வ்யத்யாஸம் ஏற்படுகின்றது என்று சாஸ்த்ரம் சொல்வதை நம்பிக்கொண்டு ஒவ்வொருவரும் தம்தம் வர்ணத்திற்குத் தக்கபடி சிற்சில நியமங்களை அநுஷ்டித்து வருவதை, த்வேஷ ஜநகமான நடத்தையென்று சொல்வது மிகவும் அஸங்கதம். லோகத்தில் ஒரு மநுஷ்யன் தனது வரம்புக்கு உட்பட்டு நடக்காமல் அதைக் கடந்து மற்றவர்களுடைய எல்லைக்குள் ப்ரவேசித்தால், அப்பொழுது அவர்களுக்குள் பரஸ்பரம் த்வேஷம் உண்டாவதையும் கலஹம் ஸம்பவிப்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். அப்படி வரம்பை மீறி நடப்பதற்குப் பதிலாக, ஒருவன் ஸ்வத: ப்ராப்தமான நியமங்களைக் காட்டிலும் அதிகமான நியமங்களை ஏற்படுத்திக்கொண்டு, தனது ஸ்வாதந்த்ர்யத்தின் எல்லையைக் குறுக்கிக்கொள்ளும் பக்ஷத்தில், அப்பொழுதும் த்வேஷம் உண்டாகின்றது என்பதை நாம் கேட்டதுமில்லை, பார்த்ததுமில்லை. ந்யாயத்திற்கு விருத்தமான ஆக்ரமணமே த்வேஷத்தை ஜநிப்பிக்குமே தவிர, ஸங்கோசம் ஒருகாலும த்வேஷத்தை ஜநிப்பிக்கமாட்டாது. தவிரவும், த்வேஷம் என்பது ஜந்மாந்தர

வாஸநாநுகுணமாக ஸம்பவிக்கும் ரஜஸ் தமோ குணங்களின் உந்மேஷத்தைச் சார்ந்தது ; கேவலம் பாஹ்ய வ்யாபாரம் அதற்கு ஒரு வ்யாஜம் மாத்ரமே ஆகக்கூடும். ஜகத்திற்கு மஹத்தான க்ஷோபத்தை உண்டு பண்ணும் 'பால்ஷேவிஸ்ட்' என்னும் துஷ்டர்கள் வஸிக்கும் இடத்தில் ஜநங்களுக்குள் காணப்படும் த்வேஷம் முதலானவை எந்த ஜாதி நியமங்களால் ஏற்பட்டிருக்கின்றன ? அநேக இடங்களில், வெவ்வேறு நியமங்களைத் தவறாது அநுஷ்டித்து வரும் வெவ்வேறு ஜாதியர்கள் பரமமான ஸௌஹார்த்தத்துடன் வர்த்தித்து வருவதை நாம் பார்க்கவில்லையா ? ஆகையால், ஜந்மாந்தர வாஸநா வசத்தால் பெருத்த கலக்கத்தை அடையும் சித்த வ்ருத்தியே த்வேஷாதிகளுக்குக் காரணமாகின்றது என்று சொல்ல வேண்டுமே தவிர, ஜாதி நியமங்களையும் இன்னும் அவை போன்ற மற்றை விஷயங்களையும் அவைகளுக்குக் காரணமென்று சொல்வது யுக்தி ஸஹமாக மாட்டாது.

இரண்டாவது, வர்ண தர்மாநுஷ்டாநத்தை ஆதரிக்குமவர்கள், அஹங்காரம் மதம் முதலிய தோஷங்களால் க்ரஸ்தர்களாக இருக்கிறார்கள் என்று சொல்வதும் சரியன்று. வர்ண தர்மங்களைச் சரிவரப் பரிபாலநம் செய்து வருபவர்கள், பெரும்பாலும், ஸமஸ்தமான ஸாத்விக ஜநங்களுக்கும் ஆஹ்லாதத்தைக் கொடுக்கக்கூடிய சுத்தமான சித்த வ்ருத்தியுடன் வர்த்தித்து வருகிறார்கள் என்பதை நாம் உறுதியாகச் சொல்வோம். அவர்கள், அஸ்ப்ருச்யத்வம் முதலிய நியமங்களை அநுஷ்டித்து வந்தால், அந்த அநுஷ்டாநம் சாஸ்த்ரங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்னும் சாஸ்த்ர விச்வாஸத்தினால் ஏற்படுகின்றதேதவிர, மற்றை எவ்வித ஆத்மோத்கர்ஷத்வ புத்தியாலுமன்று. 'தாமே உயர்ந்தவர், மற்றவர்களெல்லாரும் கீழ்ப்பட்டவர்கள்' என்னும் அஸத் புத்தியை உடையவர் எங்கேயாவது தென்படும் பக்ஷத்தில், அவர்களைச் சாஸ்த்ர வச்யர்களல்லரென்றும், அவர்கள் ருஜுவான தர்மாநுஷ்டாதாக்களாகாரென்றும் நாம் சொல்ல ஸந்நத்தராக இருக்கிறோம். விசித்ரமான ஜகத் ஸ்ருஷ்டியில் அப்படிப்பட்ட வ்யக்திகள் இருப்பது அஸம்பாவிதமன்று. ஆனால் அப்படிப்பட்ட வ்யக்திகளைப் பார்த்துவிட்டு ஜாதி முழுவதும் தோஷ துஷ்டம் என்று சொல்வது ந்யாய்யமாகாது.

இதுதான் தத்வம். மஹாத்மா, ஏதோ ஒரு அபிநிவேசத்தால் ஆக்ரமிக்கப்பட்டவராய்க் கொண்டு, இந்தத் தத்வத்தை கண்ணுற்றுப் பாராமல், நிந்தைக்கு அநர்ஹர்களாக இருக்கும் ஸாதுக்களை நிந்தித்திருக்கிறார் என்றே நாம் நினைக்கிறோம். ஆனால், அவர் சொல்லியிருக்கும் வார்த்தையில் நமக்கு அநிஷ்டமான அம்சம் ஒன்றுமில்லை. அஹங்காரம் கூடாதென்றும் பூத

ஸௌஹார்த்தம் வேண்டுமென்றும் சொல்வதில் நமக்கு ஸகலமும் உபாதேயமே. ‘‘ஹரஷொ ஈரவதி, ஈரவொ யஊஅஊதி கூராஊதி’’ என்று சாந்தி முதலிய நற்குணங்களால் கூட ஒருவனும் அஹங்காரத்தை அடையக் கூடாதென்று நமது சாஸ்த்ரம் முறையிடுகின்றதன்றோ? ஸ்ரீ சரண்யனுடைய த்யானத்திற்கும் அம்மாதிரியான காலுஷ்யம் அத்யந்தம் விருத்தம். ஆகையால், அந்தத் தோஷங்களை அநுசிந்தநம் செய்யவும் அந்த அநுசிந்தநத்தால் அவைகளைத் தூரத்தில் பரித்யஜிக்கவும் ஒரு அவகாசத்தை நமக்குக் கொடுத்த இந்த மஹாத்மாவினிடம் உபகார ஸ்ம்ருதியையே நாம் செய்கின்றோம்.

***

**நமது ஸபையின் பண்டித உபந்யாஸங்கள்.**

நமது ஆஸ்திக ப்ரபுக்களுள் ஒருவரான கோயம்புத்தூர் ஸ்ரீமாந் ஸி. வி. வெங்கடரமண ஐயங்காருடைய உதாரமான உபகாரத்தால், சேலம் கோயம்பத்தூர் ஜில்லாக்களில் இரண்டொரு மாஸகாலமாக நமது தர்ம ஸம்பத்தமாகவும் ஸித்தாந்த ஸம்பத்தமாகவும் அநேக உபந்யாஸங்கள் நடைபெற்று வருகின்றனவென்பது நமது அபிமாநிகளெல்லாருக்கும் தெரிந்த விஷயம். புத்தங்கோட்டகம் வித்வாந் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி அந்த உபந்யாஸங்களை நடத்திவருகிறார். இதுவரையில் சற்றேறக்குறைய 40 உபந்யாஸங்கள் நடந்திருக்கின்றனவென்று நாம் அறிகிறோம். உபந்யாஸங்கள், எல்லாருக்கும் ஆநந்த கரமாகவும் உபகாரகமாகவும் இருக்கின்றன வென்று கோயம்புத்தூரில் இருக்கும் நமது ஸுஹ்ருத்துக்கள் நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த உபந்யாஸங்களுட் சிலவற்றின் ஸங்க்ரஹம், அவர்களால் எழுதப் பெற்று, இந்த ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. பஹுஜநங்களாயுள்ள விவேகிகளுக்கும் தர்ம விஷயங்களில் உத்போதநங்கள் அதிமாத்ரம் உபகாரகங்களாகையாலும், ஸ்ரீ சரண்யனுடைய குணங்களைப் பற்றியும் சேஷ்டிதங்களைப் பற்றியும் பேசுவது அவனது பக்தர்களெல்லாருக்கும் போக்யமாயும் பக்தி வர்த்தகமாயும் இருக்கிறபடியாலும், இம்மாதிரியான உபந்யாஸங்கள் ஜகத்தின் ச்ரேயஸ்ஸுக்கு அடிக்கடி அவச்யம் அபேக்ஷிதங்கள். ஸ்ரீமாந் வெங்கடரமண ஐயங்காரைப் போல இதர ஆஸ்திக ப்ரபுக்களும் இம்மாதிரி உபந்யாஸங்களை வேறு இடங்களிலும் நடத்தி வைப்பார்களென்றும், ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமியைப் போல் இதர பண்டிதர்களும் முன் வந்து தமது வைதுஷ்யத்தால் உபகரிப்பார்களென்றும் நாம் நம்புகிறோம்.

***

**டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாளின் ஹிந்துமத விவாஹச் சீர்திருத்தம்.**

ஹிந்து மதத்தை அவலம்பித்திருக்கும் நாம், நமது கந்யகைகளுக்கு அதிபால்யத்தில் விவாஹத்தைச் செய்விக்கிறோம் என்றும், அப்படிச் செய்விப்பது அந்தக் கந்யகைகளுக்கும் அவர்களிடம் ஜநிக்கும் ப்ரஜைகளுக்கும் மஹத்தான அநாரோக்யத்தையும் தார்ட்யக் குறைவையும் விளைவிக்கின்றதென்றும் எண்ணி, அம்மாதிரி விவாஹம் செய்விப்பதைத் தடுக்கும் பொருட்டு, ராஜாங்கத்தாரைக் கொண்டு அது விஷயமாக ஒரு சட்டம் ஏற்படுத்துவதற்காக, டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் என்னும் இங்க்லிஷ் நாகரிகம் பெற்றிருக்கும் ஒருவர், சென்னை சட்டநிர்மாண ஸபையின் பர்யாலோசனைக்கு ஒரு வ்யவஸ்தையை விஜ்ஞாபநம் செய்துகொண்டிருக்கிறார். அதன் முக்யமான அம்சம் என்னவென்றால்: பதினான்கு வயஸ்ஸுக்குக் குறைந்த கந்யகைகளுக்கு விவாஹம் செய்யக்கூடாது என்பதே. இப்படி ஒரு விதாநம் செய்வது மிகவும் அநாவச்யம்; பல காரணங்களால் ப்ரபலமான ஆக்ஷேபத்திற்கும் அர்ஹமாகின்றது. முதலில், நம்மால் 'விவாஹம்' என்று வ்யவஹரிக்கப்படும் ஸம்ஸ்காரத்திற்கும் ப்ரஜைகளின் அநாரோக்யத்திற்கும் எவ்வித ஸம்பந்தமும் இல்லை. லௌகிக வ்யவஹாரப்படி தம்பதிகள் பதிபத்நிகளாகச் சேர்ந்து வஸிப்பதற்கு இந்த ஸம்ஸ்காரம் காரணமாகமாட்டாது. அதற்கு அர்ஹதை வருவதற்குச் சாஸ்த்ரங்கள், மற்றும் ஒரு ஸம்ஸ்காரத்தை விதிக்கின்றன. அது, தம்பதிகளுக்குச் சரியான வயது வந்த பிறகே செய்யப்படுகின்றது. 'விவாஹம்' எனப்படும் ஸம்ஸ்காரமோ, த்ரிகால ஜ்ஞாநிகளான நமது ஸ்ம்ருதி கர்த்தாக்களால், அத்ருஷ்ட பல ஸாதகங்களான சில தர்மாநுஷ்டாநங்களைச் செய்வதற்கு ஒருவித ஸ்வரூப யோக்யதையைப் பெறும் பொருட்டு மாத்ரம் விதிக்கப்பட்டிருக்கின்றது. இதன் தத்வத்தை அறிந்து கொள்ளாமலே இந்த அம்மாள் ப்ரமித்து ப்ரக்ருத வ்யவஸ்தையை ஏற்படுத்த ப்ரயத்நப்படுகின்றாரென்றே நாம் நினைக்கிறோம். மேலும், நம்மால் இப்பொழுது அநுஷ்டிக்கப்பட்டு வரும் வ்யவஸ்தை பகவதாஜ்ஞாரூபமாகப் பூர்வ காலத்தில் மஹர்ஷிகளாலும் அதற்குப் பிறகு நமது ஆசார்யர் முதலானவர்களாலும் மிகுந்த பயபக்தியுடனும் விச்வாஸத்துடனும் தவறாது பஹுகாலமாக அநுஷ்டிக்கப்பட்டு வந்திருக்கின்றது. இப்படி எவ்வித தோஷத்திற்கும் ஆஸ்பதமில்லாமலும் அநாதி காலமாக நமது பெரியோர்களால் அநுஷ்டிக்கப்பட்டு வந்திருப்பதுமான இந்த வ்யவஸ்தையை, அஜ்ஞாநத்தால் ஜநித்துள்ள ப்ரமத்தைக் காரணமாகக்கொண்டு மாற்ற முயலும் இந்த அம்மாளுடைய ப்ரயத்நம் லோக ஹிதத்தை இச்சிக்கும் அபிஜ்ஞர்களெல்லாராலும் ஸர்வதா அநா

தரிக்கத் தகுந்ததே. இதைப் பற்றிய மற்றை அம்சங்களை அடுத்த ஸஞ்சிகையில் விசாரிப்போம்.

* * *

**வர்ணாச்ரம தர்ம மஹா ஸங்கம்.**

சென்ற இரண்டொரு மாஸ காலமாகச் சென்னை திருவல்லிக்கேணியில் நமது மத ஸம்பத்தமாகச் சிறந்த உபந்யாஸங்களைச் செய்து வரும் ஸ்ரீமாந் யு. பி. க்ருஷ்ணமாசார்யருடைய ப்ரயத்நத்தின் பேரில், சென்னையிலுள்ள சில ஆஸ்திக ப்ரபுக்கள் ஒன்று சேர்ந்து, நிகழும் மார்கழி மீ 14, 15உ களில் வர்ணாச்ரம தர்ம மஹா ஸங்கமொன்றை ஸ்ரீ பார்த்தஸாரதியின் அநுக்ரஹத்தை முன்னிட்டு அவனுடைய திருவடி வாரமாகிற திருவல்லிக்கேணியில் நடத்தி வைத்தார்கள். ம-ா ா-ஸ்ரீ ராவ் பஹதூர் வி. ரங்காநதம் செட்டியார் ஸ்வாகத ஸபையின் அத்யக்ஷராகவும், ஸ்ரீ. உப நடாதூர் ஸ்ரீநிவாஸாசார்யர் மஹா ஸங்கத்தின் அக்ராஸநாதிபதியாகவும், பலவிடங்களிலிருந்து அநந்ய ப்ரயோஜநமாக வந்திருந்த பல பண்டித ரத்நங்கள் உபந்யாஸம் செய்பவர்களாகவும், இம்மாதிரி மிக்க சிறப்புடன் அந்த ஸங்கம் நடைபெற்றது என்று நாம் அறிகிறோம். இது நமக்கு மிகவும் ஆச்வாஸகரமாக இருக்கின்றது. தர்மத்தைப் பற்றிப் பேசுவதையே மிகவும் லஜ்ஜாகரமென்று நினைக்கும் ஜநங்களால் நிறைந்துள்ள இக்காலத்தில், அப்ரத்யக்ஷங்களாக சில விஷயங்களுண்டென்றும், அவைகளுள் ச்ரேயஸ்கரமென்று நமது மஹர்ஷிகளாற் சொல்லப்பட்டிருப்பவைகளை ஸாதித்துக்கொள்ள வேண்டுமென்றும் சில ஜநங்களாவது ஒருவிதமான ச்ரத்தையுடன் ப்ரவ்ருத்திக்கத் துணிகிறார்கள் என்பதைப் பார்ப்பது ஸ்வல்பமான ஆச்வாஸத்தையாவது ஜநிப்பிக்குமன்றோ? உண்மையாகவே,

> സംശയസ്ഥാ ശ്രദ്ധയാ യത്തു ധനകോടിവിയ്യതേ യദി ।
> സനാതനസ്യ യജ്ഞസ്യ ജീവിതാശാ തതോ ഭവേത് ॥

என்பது நமது நம்பிக்கை. பீஜ பூதமான இந்த ச்ரத்தையைத் தமது புருஷ ப்ரயத்நத்தால் பாதுகாத்து அதை நாசமடைய வொட்டாமல் ஸம்ரக்ஷிக்க முயன்று வரும் ஸ்ரீமாந் யு பி. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி போன்ற மஹான்களுடைய பரிச்ரமத்தை ஸ்ரீ சரண்யன் தனது க்ருபையால் ஸபலமாகச் செய்யவேண்டுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

---